இலக்கண வழிகாட்டி வரிசை—1

# யாப்பருங்கலக் காரிகை

[சென்னைப் பல்கலைக் கழகத்தினரால் நடத்தப்பெறும் எம். ஏ., பி. ஏ. (ஆனர்சு), பி. ஏ. (V th Group), இண்டர் மீடியேட் (Gr. D.), வித்துவான் முதனிலை (Preliminary) முதலிய தமிழ்த் தேர்வுகளில் கொடுக்கப்பட்ட கேள்விகளும் அவற்றிற்குரிய விடைகளும்]


**அ. திருமலைமுத்துசுவாமி**

தியாகராசர் கல்லூரி

மதுரை



விற்பனையுரிமை

**ஸ்டார் பிரசுரம்**

மேலக்கோபுரத் தெரு, மதுரை | திருவல்லிக்கேணி, சென்னை-5

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

முதற் பதிப்பு—நவம்பர், 1955.

விலை ரூ. 1—4—0

ஜனதா பிரிண்டர்ஸ், மேலமாசி வீதி, மதுரை:—55.

# முன்னுரை

தமிழினைச் சிறப்புப் பாடமாக எடுத்துப் பயிலும் மாணவர்கள் படிக்கவேண்டிய இலக்கண நூல்களில் யாப்பருங்கலக் காரிகையும் ஒன்றாகும். இவ்வழிகாட்டி சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களின் வாயிலாகவோ அன்றி தமிழ்ச் சங்கங்களின் வாயிலாகவோ நடைபெறும் தேர்வுகட்குப் பயிலும் மாணவர்கள் யாப்பருங்கலக் காரிகையினை ஐயந்திரிபறக் கற்பதற்கு உதவும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இதனைத் தமிழ்த் தாயின் பாதங்களில் சூட்டுகின்றேன்.

தமிழ் மாணவர்கள் நலம் கருதியே இதனை வெளியிடுவதால், அவர்களது முழு ஆதரவும் எனக்குக் கிடைக்கும் என எண்ணுகின்றேன்.

கி. பி. 1948 முதல் 1955 முடிய சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் தேர்வுகளில் கேட்கப்பட்ட கேள்விகளை எடுத்து, அவற்றிற்குரிய விடைகளையும் எழுதிப் பின்னர் அவைகளை நூலில் உள்ள பொருளமைப்புக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தியுள்ளேன். வேறு சில கேள்விகளும் என்னால் கொடுக்கப்பட்டுள்ளன. 'இண்டர்மீடியட்' ('D' Group) தேர்வில் கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளே வித்துவான் முதனிலைத் தேர்வுக்கும் உரியன.

**ஆசிரியன்**

# 1. தற்சிறப்புப்பாயிரம்

1. யாப்பருங்கலக் காரிகை என்ற பெயரின் பொருத்தத்தை ஆராய்க. [Int. 1950.]

யாப்பருங்கலக் காரிகை என்னும் நூல், பாளித்தியம் என்னும் பாகத இலக்கணம், பிங்கலம் என்னும் சந்தோவிசிதம்போல, காரிகை யாப்பிற்றாய்; குணகாங்கியம் என்னும் கருநாடகச் சந்தமேபோல மகடூஉ முன்னிலைத்தாய்; அவை அடக்கமும் கொண்டு; மயேச்சுரர் யாப்பேபோல, உதாரணம்கூறி; இசைத்தமிழ்ச் செய்யுள் துறைக் கோவையே போலவும், வேதத்தில் கூறப்படும் எட்டு இயல்களையுடைய வருக்கக் கோவையே போலவும், உரூபாவதாரத்திற்கு நீதகச்சுலோகமே போலவும், முதனிலைப் புணர்த்திய இலக்கியத்ததாய்; வேதத்திற்கு நிருத்தமும், வியாகரணத்திற்குக் காரிகையும், அவிநயர்யாப்பிற்கு காலடி காற்பதும்போல, யாப்பருங்கலம் என்னும் யாப்பிற்கு அங்கமாய்; அலங்காரம் உடையதாகச் செய்யப்பட்டமையால், இதற்கு யாப்பருங்கலக் காரிகை என்னும் பெயர் மிகவும் பொருத்தமுடைத்தாகும்.

2. யாப்பருங்கலக் காரிகை செய்யப்பெற்றதற்குரிய காரணத்தைக் கூறுக.

பண்டையோர் கூறிய தண்டமிழ் யாப்பிலக்கணத்தில் பற்றுதல் இல்லாதவர்களைப் பற்றுக்கொள்ளுமாறு செய்தற்காக, அருந்தவப் பெருந்தன்மை அமிதசாகரர் இந்நூலை இயற்றினர்.

3. கிரந்தம் என்பதன் அளவென்னை ? காரிகைச் செய்யுள் ஒவ்வொன்றும் எத்தனை கிரந்தங் கொண்டது ? [M. A. 1952]

ஒரு கிரந்தம் என்பது, ஒற்றொழித்து உயிரும் உயிர் மெய்யுமாகிய 32 எழுத்தாகும். அவற்றுள் நேரசை முதலாகிய காரிகை இருபத்தொன்றும், நிரையசை முதலாகிய காரிகை இருபத்து மூன்றும் ஆகும். நேரசை முதலாகிய காரிகை ஒன்றினுக்கு எழுத்து அறுபத்து நான்கும் நிரையசை முதலாகிய காரிகை ஒன்றினுக்கு எழுத்து அறுபத்தெட்டும் ஆகும் இவ்விருதிறமுங் கூட்டி உறழ இரண்டாயிரத்துத் தொளாயிரத்தெட்டு எழுத்தாகும். நேரசை முதலாகிய காரிகை ஒற்றொழித்து ஓரடிக்கு எழுத்துப் பதினாறும், நிரையசை முதலாகிய காரிகை ஒற்றொழித்து ஓரடிக்கு எழுத்துப் பதினேழும் எனக்கொள்ளுதல் வேண்டும்.

காரிகையின் அளவு :

இயல்வகையால் மூன்றும், காரிகை வகையால் நாற்பத்து நான்கும், கிரந்த வகையால் தொண்ணூறு கிரந்தமும் இருபத்து எட்டு எழுத்தும் எனக் கொள்ள வேண்டும்.

4. காரிகையின் முதனூலும் இந்நூற் காரிகைகளின் தன்மையும் விளங்க உணர்த்துக. [Int 1951,]

யாப்பருங்கலக் காரிகை என்னும் நூல், உறுப்பியல் செய்யுளியல், ஒழிபியல், என மூவகைப்படும். அவற்றுள் உறுப்பியல் என்பது, எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, என்னும் ஆறு உறுப்புக்களையும் உணர்த்துகின்

றது. செய்யுளியல் என்பது, வெண்பா, வெள்ளொத் தாழிசை, வெண்டுறை, வெளி விருத்தம்; ஆசிரியப்பா, ஆசிரியத்தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம்; கலிப்பா, கலித்தாழிசை, கலித்துறை, கலி விருத்தம்; வஞ் சிப்பா, வஞ்சித்தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சி விருத்தம்; மருட்பா, எனக்கிடந்த செய்யுட்களை உணர்த்துகின்றது. ஒழிபியல், உறுப்பியலுள்ளும் செய்யுளியலுள்ளும் சொல் லா து ஒழிந்தவைகளைக் கூறுகின்றது.

இந்நூலின் முதனூல் யாப்பருங்கலமாகும். இந் நூலின் பயன் யாப்பு ஆராய்தல் ஆகும். யாப்பு ஆராயவே, பா, தாழிசை, துறை, விருத்தங்களால் ஆக்கப்பட்ட, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் அவற்றின் மெய்ம்மை அறிந்து, விழுப்பம் எய்தி, இம்மை மறுமை வழுவாமல் நிகழ்வாராதலின், இருமைக்கும் உறுதி பயப் பது யாப்பாகும்.

5. ஆசிரியர் அவையடக்கத்தில் கூறுவதைச் சுருக் கித் தருக.

6. "பனிமாலிமயப் பொருப்பகஞ் சேர்ந்த பொல் லாக் கருங்காக்கையும் பொன்னிறமாய்" இருக்கும் என்பது எதை விளக்க வந்தது? [Int. Mar. 1955]

ஆசிரியர் அவையடக்கத்தில், 'தேன் நிறைந்த மணங் கமழும் வேப்ப மாலையையுடைய பாண்டியன் கேட்க, அருவி நீரையுடைய சந்தனச்சோலை சூழ்ந்த பொதிய மலை யிலிருக்கும் அகத்திய முனிவரால் செய்யப்பட்ட முத் தமிழுள், இயற்றமிழின் கூறாகிய யாப்பிலக்கணத்தை,

யானும் அவாவினால் எனது புல்லிய நாவால் சொல்லத் தொடங்கினேன்; இஃது அறிவிலியாகிய எனக்கே நகையினை விளைக்குமாயின், அறிவுடையோர்க்கு யாதாகுமோ" எனக்கூறுகின்றார். மேலும் அவர் கூறுவதாவது, "பனி தோய்ந்த நெடிய இமயத்தைச் சேர்ந்த இழிந்த கரிய காக்கைப் புள்ளும் பொன்னிறம் உற்றிருக்கும் என்று உலகத்தவர் சொல்வதுபோல, குற்றந்தீர்ந்த அளவில்லாத நூற் கேள்வியை உடைய புலவருக்கு முன் குற்றமுடைய அறிவில்லாத நான் கூறிய சிறப்பில்லாத பிண்டப் பொருளும் சிறந்த நுண்பொருள் ஆகும்."

# 2. உறுப்பியல்

1. எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை — பொருள் கூறி விளக்குக. [Int. 1950]

1. எழுத்து: எழுதப்படுதலின் எழுத்தாகும். அது முதல், சார்பென இருவகைப்படும். செய்யுள் அடிக்கு எழுத்து எண்ணுங்கால் மெய்கள் எண்ணப்படா. தளை சிதைய வருமிடத்துக் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் அளபெடையும், சேர்க்கப்படமாட்டா.

2. அசை: எழுத்து அசைத்து இசை கோடல் அசையாகும். அதாவது அசை எழுத்துக்களால் ஆக்கப்பட்டு சீர்க்கு உறுப்பாய் வரும். அவ்வசை நேர் அசை, நிரையசை என இருவகைப்படும்.

3 சீர்: அசை இயைந்து சீர்கொள நிற்றல் சீராகும். அவ்வசை சிறுபான்மை தனித்தும், பெரும்பாலும்

இரண்டு முதலியவாகத் தொடர்ந்தும் வருவது சீராகும். அச்சீர் ஓரசைச் சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச் சீர் என நான்கு வகைப்படும்.

4. தளை: சீரிரண்டு தட்டு நிற்றலில் தளையாகும். நின்ற சீரின் ஈற்றசையோடு வருஞ்சீரின் முதலசை ஒன்றியேனும் ஒன்றாதேனும் கூடி நிற்பதாகும். நேர்முன் நேரும், நிரைமுன் நிரையும் வருதல் ஒன்றி வருதலாகும். அவ்வாறன்றி நேர்முன் நிரையும், நிரைமுன் நேரும் வருதல் ஒன்றாது வருதலாகும். நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, வெண்சீர் வெண்டளை, இயற்சீர் வெண்டளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றா வஞ்சித்தளை, கலித்தளை, என தளை ஏழுவகைப்படும்.

5 அடி: தளையடுத்து நடத்தல் அடியாகும். அதாவது தளைகள் ஒன்றும் பலவும் அடுத்து வருவதாம். அவ்வடி, குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐவகைப்படும்.

6. தொடை: அடி இரண்டு தொடுத்தல் முதலாயின தொடையாகும். பல அடிகளிலேனும் பல சீர்களிலேனும் எழுத்துக்கள் ஒன்றி வருவதாம். மோனைத் தொடை, இயைபுத்தொடை, முரண்தொடை, அளபெடைத்தொடை, எதுகைத்தொடை, அந்தாதித் தொடை, இரட்டைத்தொடை, செந்தொடை என தொடை எட்டு வகைப்படும். தொடை விகற்பங்கள் 43 ஆகும்.

2. காரிகையில் உறுப்பியலால் உணர்த்தப்படும் பொருளைத் தொகுத்துத் தருக. [Int. 1951]

(உறுப்பியல் முதல் கேள்விக்குரிய விடையே இதற்கும் உரியது.)

3. அசைக்கு உறுப்பாவன எவை? [Int. Mar.1955]

பின்வரும் பதின்மூன்றும் அசைக்கு உறுப்பாகும்.

1. குறில் (அ, இ, உ, எ, ஒ)

2. நெடில் (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ)

3. ஆவி (உயிர் எழுத்துப் பன்னிரண்டு)

4, 5, 6. குறுகிய மூவுயிர் (குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம்)

7. ஆய்தம்

8. மெய் (பதினெட்டு)

9, 10, 11. மூவினம் (வல்லினம், மெல்லினம், இடையினம்)

12. உயிர்மெய் (உயிர் 12 × மெய் 18 = 216)

13. அளபெடை

4. சிறு குறிப்பு வரைக:

1. குற்றியலுகரம் 2. குற்றியலிகரம் 3. ஐகாரக் குறுக்கம் 4. உயிரளபெடை 5. ஒற்றளபெடை.

(1) குற்றியலுகரம்:— நெடிற்கீழும், நெடிலொற்றின் கீழும், குறிலிணைக் கீழும், குறிலிணையொற்றின் கீழும், குறினெடிற்கீழும், குறினெடிலொற்றின் கீழும், குற்றொற்றின்கீழும் என்று இந்த எழு இடத்தும் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து உகரம் வந்தால் அது குற்றியலுகரமாகும்.

(2) குற்றியலிகரம்:— உகரத்திரிந்தும் திரியாதும் யகரமோடியையப் பின்கண் வந்த இகரம் குற்றியலிகரமாகும்.

(3) ஐகாரக் குறுக்கம்:— அளபெடுத்தற் கண்ணும், தனியே சொல்லுதற் கண்ணுமன்றி அல்லாத வழிவந்த ஐகாரம் தன்னளவிற் சுருங்கி ஒன்றரை மாத்திரையும், ஒரு மாத்திரையுமாகக் குறுகும். அவை குறுகுமிடத்து, மொழி முதலிடை கடையென மூன்றிடத்துங் குறுகும்.

(4) உயிரளபெடை:— உயிருள் நெட்டெழுத்தேழும் அளபெடுக்கும். அவை அளபெடுக்குமிடத்து ஐகாரம் இகரத்தோடும், ஔகாரம் உகரத்தோடும் அளபெடுக்கும். ஒழிந்தனவும் தமக்கு இனமாகிய குற்றெழுத்தோடு அளபெடுக்கும்.

(5) ஒற்றளபெடை:— ஒற்றுகளுள் ங, ஞ, ண, ந, ம, ன, வ, ய, ல, ள, ஆய்தமென்னும் பதினோரொற்றும், குறிற்கீழும், குறிலிணைக்கீழும் வந்து அளபெடுக்கும்.

### 5. குற்றியலுகரத்திற்கு எழிடம் கொள்ளப்பட்டது என்? பிறர் எவ்வாறு கொள்வர்?

ஈற்றுக்கு அயல் அசையை நோக்கி ஏழிடம் கொள்ளப்பட்டது. எவ்வாறெனின், குறில் தனித்தும், ஒற்றடுத்தும், நெடில் தனித்தும், ஒற்றடுத்தும் வரும் நேரசை நான்கும் குறிலிணைந்தும், ஒற்றடுத்தும், குறில் நெடில் இணைந்தும், ஒற்றடுத்தும் வரும் நிரையசை நான்குமாகிய எட்டினுள், குறில் தனித்து வருதலொழிந்த மற்ற ஏழு அசைகளும் ஈற்றுக்கு அயலில் வருதலை நோக்கிக் கொள்ளப்பட்டன.

இனி, ஈரெழுத்தொருமொழி, உயிர்த்தொடர்மொழி, இடைத்தொடர்மொழி, ஆய்தத்தொடர்மொழி, வன்றொ

டர் மொழி, மென்றொடர்மொழி எனக் குற்றியலுகரம் அறுவகைப்படும் என்பாரும் உளர்.

### சூத்திரம்.

'குறினெடி லாவி குறுக்கிய மூவுயி ராய்தமெய்யே
மறுவறு மூவின மைதீ ருயிர்மெய் மதிமருட்டும்
சிறுநுதற் பேரமர்க் கட்செய்ய வாயைய நுண்ணிடையாய்
அறிஞ ருணர்த்த வளபு மசைக்குறுப் பாவனவே'

[யா. கா. 4]

[சூத்திரத்தில் 'மறுவறு மூவினம்' என்று சிறப்பித்த வசனத்தால் அவை உயிர் மெய்யாகிய காலத்தும், அப்பெயரானே வழங்கப்படும் எனக்கொள்க. 'மைதீருயிர் மெய்' என்று சிறப்பித்தவசனத்தால் ஏறிய உயிரினளவே உயிர் மெய்க்கும் அளவென்பது பெறப்படும். 'அறிஞருணர்த்த வளபும்' என்று கூறியவசனத்தால், குற்றெழுத்தும் ஒற்றளபெடையும் ஒரோ ஒன்று ஒரு மாத்திரை; நெட்டெழுத்து இரண்டு மாத்திரை; உயிரளபெடை மூன்று மாத்திரை; ஆய்தமும், மெய்யும், குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஒரோ ஒன்று அரை மாத்திரை; ஐகாரக் குறுக்கம் ஒன்றரை மாத்திரை; மகரக் குறுக்கமும், ஆய்தக்குறுக்கமும் ஒரோ ஒன்று கால் மாத்திரை; என்பன பெறப்படும்.]

6. நேரசை, நிரையசை - உதாரணம் கூறி விளக்குக.

நேரசை:— குறிலேனும் நெடிலேனும் தனித்தும் அல்லது ஒற்றடுத்தும் வருவன நேரசைகளாகும்

உ-ம்: (1) ஆழி (ஆ-நெடில் தனித்து நிற்பது; ழி— குறில் தனித்து நிற்பது).

(இம்மொழியில், நெடிலும், குறிலும் தனித்து நேரசை யாயின)

(2) சொல், வான் (குறிலும், நெடிலும் ஒற்றடுத்து நேரசையாயின)

சொல் - குறில் ஒற்றடுத்து நிற்பது.

வான் - நெடில் ஒற்றடுத்து நிற்பது.

நிரையசை:— குறிலிணையேனும், குறினெடிலேனும் தனித்தும் அல்லது ஒற்றடுத்தும் வருவன நிரையசைகளாகும்.

உ - ம். அணி - அணில்; குரா - குரால்.

அணி - குறில் இணைந்து வருதல்.
அணில் - குறில் இணைந்து ஒற்றடுத்து வருதல்.
குரா - குறில் நெடிலிணைந்து வருதல்
குரால் - குறில் நெடிலிணைந்து ஒற்றடுத்து வருதல்.

## சூத்திரம்

'குறிலே நெடிலே குறிலிணை யேனைக் குறினெடிலே
நெறியே வரினு நிறைந்தொற் றடுப்பினு நேர்நிரையென்
றறிவையுரையுமென் றோளியுதாரண மாமிவெள்வேல்
வெறியே சுறாநிறம் விண்டோய் விளாமென்று
வேண்டுவரே.' [யா. கா. 5]

[சூத்திரத்தில் 'விண்டோய் விளாம்' என்று கூறிய வகையால் நேரசை ஓரலகுபெறும், நிரையசை ஈரலகுபெறும் என்பது பெறப்படுகின்றன.]

[illegible]ர் எத்தனை வகைப்படும்? எவை? உதாரணம் கூறி விளக்குக. ஒவ்வொன்றிற்கும் உரிய உதாரணவாய் பாட்டினையும் வரைக.

8. அசைச் சீர் என்பது யாது? உதாரணம் தருக. [Int. Mar. 1952]

9. நாலசைச் சீரின் தொகை கூறி உதாரண வாய்பாடுகள் தருக. [Int. Mar. 1952]

10. பொதுச் சீர் என்பது யாது? உதாரணம் தருக.

சீரின் வகை :—

ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என சீர் நான்கு வகைப்படும்.

(1) ஓரசைச்சீர் :

தனித்துவரும் நேரசையும் நிரையசையும் ஆகிய இரண்டும் ஓரசைச் சீர்களாம். அவை அசைச்சீர் எனப்படும்

உதாரண வாய்பாடு :—

நேர் - நாள். நிரை - மலர்.

(இவை பெரும்பாலும் வெண்பாவின் ஈற்றிலும், சிறுபான்மை ஒழிந்தவற்றுள்ளும் வரும்.)

உதாரணம் :—

1. 'மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.'

2. 'கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின்'

(இக்குறள் வெண்பாக்களின் இறுதியில், வார் - நாள்; ரெனின் - மலர் என ஓரசைச்சீர் இரண்டும் வந்துள்ளன)

(2) ஈரசைச்சீர் :—

நேர்நேர் - நிரைநேர் - நிரைநிரை - நேர் நிரை என இரண்டசை கூடிவருதலாகிய சீர் நான்கும் ஈரசைச்சீர்க

நான்காகும். அவை ஆசிரிய வுரிச்சீர் அல்லது அகவற்சீர் எனப்படும். (அகவலெனினும், ஆசிரியமெனினும் ஒக்கும்.) ஈரசைச்சீர்கள் அகவற்கே உரியவாய் இயற்சீரெனவும், அகவற்சீரெனவும், பெயர்பெறும்.

உதாரண வாய்பாடு :

நேர்நேர் - தேமா. நிரைநேர் - புளிமா.
நிரை நிரை - கருவிளம். நேர்நிரை - கூவிளம்.

உதாரணம் :-

'வேதப் பொருளாய் விளங்கிய சங்கரன்
பாதத் துணைமனம் பற்றுவோர்
போதத் தொளிர் நலம் பொருந்தி வாழ்குவரே.'

(இவ்வகையுள், வேதப் (தேமா), பொருளாய் (புளிமா), விளங்கிய (கருவிளம்) சங்கரன் (கூவிளம்) என ஈரசைச்சீர் நான்கும் வந்துள்ளன.)

(8) மூவசைச்சீர் :-

மேற்சொல்லப்பட்ட நேர் நேர் முதலிய நான்கின் இறுதியிலும் நேரசையும் நிரையசையும் தனித்தனி கூடி வரும் எட்டுச் 'சீர்களும், மூவசைச் சீர்களாகும். இவ்வெட்டும் உரிச்சீர் எனவும், இவற்றுள் காய்ச்சீர் நான்கும் வெண்பாவிற்கு உரியவாய் வெண் சீரெனவும், கனிச்சீர் நான்கும் வஞ்சிப்பாவிற்கு உரியவாய் வஞ்சிச் சீரெனவும் பெயர் பெறும்.

உதாரண வாய்பாடு :—

நேர்நேர்நேர் - தேமாங்காய்; நிரைநேர்நேர் - புளிமாங்காய்
நிரைநிரைநேர்-கருவிளங்காய்; நேர்நிரைநேர்-கூவிளங்காய்

நேர்நேர்நிரை-தேமாங்கனி; நிரைநேர்நிரை-புளிமாங்கனி
நிரைநிரைநிரை-கருவிளங்கனி; நேர்நிரைநிரை-கூவிளங்கனி

உதாரணம் :—

1. "ஆனந்தக் கூத்த னடிக்கன்பு செய்மனனே
ஈனக் தனையொழிவா யின்று"

(இக்குறள் வெண்பாவினுள், ஆனந்தக்(தேமாங்காய்) கூத்த(தேமா), னடிக்கன்பு (புளிமாங்காய்), செய்மனனே (கூவிளங்காய்), ஈனக்(தேமா), தனையொழிவா (கருவிளங்காய்) யின்று(காசு)எனக் காய்ச்சீர் நான்கும் வந்துள்ளன.)

2. 'மண்ணீரனல் வளிவானொடு
வெண்ணீர்மதி வெங்கதிருயிர்
எண்ணீடுரு வியைபசுபதி
நான்கும்
என்மன மிடங்கொண் டிறைதலால்
வன்மனக் கொடிய சொற்கிலை மயங்குதலே'

(இவ்வஞ்சிப்பாவினுள், மண்ணீரனல் (தேமாங்கனி) வளிவானொடு (புளிமாங்கனி), வெண்ணீர்மதி—தேமாங்கனி வெங்கதிருயிர் (கூவிளங்கனி), எண்ணீடுரு—தேமாங்கனி, வியைபசுபதி (கருவிளங்கனி) எனக் கனிச்சீர் நான்கும் வந்துள்ளன.)

(4) காலசைச்சீர் :—

மேலே கூறிய மூவகைச் சீர் எட்டன் இறுதியிலும் நேரசையும் நிரையசையும் தனித்தனி அடுத்துவரும் சீர் பதினாறும் காலசைச் சீர்களாகும்.

(இவை எல்லாவற்றிற்கும் பொதுவாக வருவதால் யாப்பிலக்கணகாரர், இவற்றைப் பொதுச்சீர் என வழங்குகின்றனர். இவை வெண்பாவினுள் வருவன அல்ல. கலிப்பாவினுள்ளும் அகவலுள்ளும் பெரும்பாலும் குற்றியலுகரம் வந்த இடத்து அன்றி வாரா. வஞ்சிப்பாவினுள் பெரும்பாலும் வரவும் ஓரடியுள் இரண்டு நாலசைச் சீர்கள் ஒன்றுற்று நிற்கவும் பெறும்.

உதாரண வாய்பாடு :

தண்பூ :

1. தேமாந்தண்பூ — நேர் நேர் நேர் நேர்.
2. புளிமாந்தண்பூ - நிரை நேர் நேர் நேர்.
3. கருவிளந்தண்பூ — நிரை நிரை நேர் நேர்.
4. கூவிளந்தண்பூ - நேர் நிரை நேர் நேர்

நறும்பூ :

1. தேமா நறும்பூ - நேர் - நேர் நிரை நேர்.
2. புளிமா நறும்பூ - நிரை நேர் நிரை நேர்.
3. கருவிள நறும்பூ - நிரை நிரை நிரை நேர்.
4 கூவிள நறும்பூ - நேர் நிரை நிரை நேர்.

தண்ணிழல் :

1. தேமாந் தண்ணிழல் - நேர் நேர் நேர் நிரை.
2. புளிமாந் தண்ணிழல் - நிரை நேர் நேர் நிரை.
3. கருவிளந் தண்ணிழல் - நிரை நிரை நேர் நிரை.
4. கூவிளந் தண்ணிழல் - நேர் நிரை நேர் நிரை.

நறுநிழல் :

1. தேமா நறுநிழல் - நேர் நேர் நிரை நிரை.
2. புளிமா நறுநிழல் - நிரை நேர் நிரை நிரை.

3. கருவிள நறுநிழல் - நிரை நிரை நிரை நிரை.
4. கூவிள நறுநிழல் - நேர் நிரை நிரை நிரை.

உ - ம் :

"அள்ளற்பள்ளத் தகன்சோணாட்டு
வேங்கைவாயில் வியன்குன்றூரன்"
அள்ளற்பள்ளத் - தேமாந்தண்பூ
தகன்சோணாட்டு - புளிமாந்தண்பூ
வேங்கைவாயில் - தேமாந்தண்பூ
வியன்குன்றூரன் - புளிமாந்தண்பூ

(இவ்வஞ்சியடியில் இரண்டு நாலசைச் சீர் வந்துள்ளன.)

11. 'ஓரசையே நின்றுஞ் சீராம் பொது வொரு நால சையே'—பொருளை விளக்குக. [Int. 1951]

12. 'கண்ணிய பூவினங் காய்ச் சீரனைய கனியொ டொக்கும் ஒண்ணிழற் சீரசைச் சீரியற் சீரொக்கு மொண்டளைக்கே' — பொருளை விளக்கி உதாரண வாய்பாடு தருக.
[Int Mar. 1955, 1952.]

1. 'ஓரசையே நின்றுஞ் சீராம்' — ஒரோவிடத்து நேரசை தானே நின்றுஞ் சீராம்; நிரையசை தானே நின்றுஞ் சீராம்; அவை அசைச்சீர் எனப்படும்.

'பொதுவொரு நாலசையே' — நாலசையினாகிய சீர் பொதுச் சீர் எனப்படும்.

2. 'கண்ணிய பூவினம் காய்ச் சீரனைய'—

நாலசைச் சீர் பதினாறனுள்ளும், பூ என்னும் சொல் லிறுதியாகிய நேரீற்றுப் பொதுச்சீர் எட்டும், காய் என்

னும் சொல்லிறுதியாகிய வெண்பா வுரிச்சீரே போலக் கொண்டுவரும் சீர் முதலசையோடு ஒன்றுவது வெண்சீர் வெண்டளையாகவும், ஒன்றாதது கலித்தளையாகவும் வழங்கப்படும். 'கண்ணிய பூவினம்' என்று சிறப்பித்தவதனால், வெண்பாவினுள் நாலசைச்சீர் வாரா; ஆசிரியத்துள்ளும் குற்றுகரம் வந்துழி அன்றிவாரா; கலியினுள்ளும் பெரும்பான்மையும் குற்றுகரம் வந்துழி அன்றி வாரா; வஞ்சியுள் குற்றுகரம் வாராதேயும் வரப்பெறும்; வஞ்சியுள் இரண்டு நாலசைச்சீர் ஓரடியுள் அருகி இயைந்து ஒன்றோடொன்று பொருந்தி நிற்கவும் பெறும்; அல்லன வற்றுள் பெரும்பான்மையும் ஓரடியுள் ஒன்றன்றி வாரா; இரண்டு வரினும் இயைந்து நில்லா; பாவினத்துள்ளும் பயின்று வாரா; என்பன பெறப்படும்.

'கனியொடொக்கு மொண்ணிழற் சீர்'—

நிழல் என்னும் சொல்லிறுதியாகிய நிரை ஈற்றுப் பொதுச்சீர் எட்டும், கனி என்னும் சொல்லிறுதியாகிய வஞ்சியுரிச் சீரேபோலக் கொண்டு வருஞ்சீர் முதலசையோடு ஒன்றினும் ஒன்றாவிடினும் வஞ்சித்தளை என்று வழங்கப்படும். 'ஒண்ணிழற்சீர்' என்று சிறப்பித்தவதனால் நிழல் என்னும் சொல்லிறுதியாகிய நிரையீற்றுப் பொதுச்சீர் எட்டும் வஞ்சிப்பாவில்தான் வரும் என்பது பெறப்படும்.

'அசைச் சீரியற் சீரொக்கும்':—

ஓரசைச்சீர் ஆசிரிய உரிச்சீரே போலக் கொண்டு வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது ஆசிரியத்தளையாகவும், ஒன்றாதது இயற்சீர் வெண்டளையாகவும் வழங்கப்படும். (இயற்சீரெனினும், ஆசிரியச்சீர் எனினும் ஒக்கும்.)

'ஒண்டளைக்கே':
ஒள்ளிய தளை வழங்குமிடத்து.

13. தளைகளின் பெயர்களை எழுதி உதாரணமும் தருக. [B. A. 1952.]

தளை எழு வகைப்படும். அவை பின் வருவன:

1. நேரொன்றாசிரியத்தளை
2. நிரையொன்றாசிரியத்தளை
3. இயற்சீர் வெண்டளை
4. வெண்சீர் வெண்டளை
5. ஒன்றிய வஞ்சித்தளை
6. ஒன்றாத வஞ்சித்தளை
7. கலித்தளை

1. **நேரொன்றாசிரியத்தளை :**

மாமுன் நேர் வருவது நேரொன்றாசிரியத்தளையாகும்.

2. **நிரையொன்றாசிரியத்தளை :**

விளமுன் நிரை வருவது நிரையொன்றாசிரியத் தளையாகும்.

உ - ம் :

"தேனார் கஞ்சச் செம்மலாதி
வானோர் மாதர் மங்கலங் களத்திடை
வலியோடு நிலைபெற மலிபெருங் கருணையின்
அலைதரு மிருள்விட மணிமிடற் றிருத்தும்
தில்லையுட் சிவபிரான் றிருவடி
ஒல்லையிற் பரசுநர்க் குயர்கதி யெளிதே"

[இவ்வகவலுள், தேனார் + கஞ் என மா முன்நேர் வருதலால் இது நேரொன்றாசிரியத் தளையாம். மங்கலங் + களத் என விளமுன் நிரை வருதலால் இது நிரையொன்றாசிரியத் தளையாம்.

3. வெண்சீர் வெண்டளை :

காய்முன் நேர் வருவது வெண்சீர் வெண்டளையாகும்.

4. இயற்சீர் வெண்டளை :

மாமுன் நிரையும், விளமுன் நேரும் வருவன இயற்சீர் வெண்டளையாகும்.

"பெரியவர் தந்நோய்போற் பிறர் நோய்கண் டுள்ளம்
எரியி னிழுதாவ ரென்க — தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்."

(இந்நேரிசை வெண்பாவினுள், பெரியவர்தந் + நோய் எனக்காய் முன் நேர் வருதலால் இது வெண்சீர் வெண்டளையாம். நோய்போற் + பிறர் என மாமுன் நிரை வருதலால் இஃது இயற்சீர் வெண்டளையாம்)

5. ஒன்றிய வஞ்சித்தளை :

கனிமுன் நிரைவருவது, ஒன்றிய வஞ்சித்தளையாகும். (உ-ம்) 'மண்ணீரனல் வளிவானெடு' எனக்கனி முன் நிரை வந்து ஒன்றியது.

6. ஒன்றாத வஞ்சித்தளை :

கனிமுன் நேர் வருவது ஒன்றாத வஞ்சித்தளையாகும். (உ-ம்.) 'செந்தாமரை நாண்மலர் மிசை' எனக் கனிமுன் நேர்வந்து ஒன்றாதாயிற்று.

7. கலித்தளை :

காய்முன் நிரை வருவது கலித்தளையாகும்.

"அஞ்சம்போ னடை" என்பதில் அஞ்சம்போ + னடை எனக் காய்முன் நிரை வருதலால் இது கலித்தளையாகும்.

14. **'வஞ்சி வண்சீர் விகற்பமும் வஞ்சிக்குரித்து'-பொருள் கூறி உதாரணம் தருக.** [Int. 1953]

இது ஒன்றாத வஞ்சித்தளையின் இலக்கணம் கூறுகிறது. வஞ்சிச்சீருக்கு முன் அதாவது கனிச்சீருக்குமுன் நிரை வருவது ஒன்றிய வஞ்சித் தளையாகும். விகற்பம் என்பது ஒன்றாது வருவது; கனிச்சீருக்கு முன் நேர் வருவது. இங்ஙனம் ஒன்றாது வருவதும் வஞ்சித்தளையேயாகும். இது ஒன்றாத வஞ்சித்தளை எனப்படும்.

உ - ம். செந் தா <u>மரை</u> <u>நாண்</u> மலர் மிசை.

15. **அடிகளது பெயர்களை எழுதி அவற்றினது இலக்கணத்தை உதாரணத்துடன் எடுத்தியம்புக. அல்லது, சிந்தடி, நெடிலடி, கழிநெடிலடி - இவற்றின் தன்மையை விளக்கி வரைக.** (Int. 1951]

மேற்கூறிய தளைகள் ஒன்றும் பலவும் அடுத்து வருவது அடியாகும். அவ்வடி, குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐந்து வகைப்படும்.

1. **குறளடி :** இரு சீரால் வருவது.
   உ - ம்: 'நிரைத்த சாலிகை'
2. **சிந்தடி :** முச்சீரால் வருவது.
   உ - ம்: 'இருது வேற்றுமை யின்மையாற்'
3. **அளவடி அல்லது நேரடி :**
   நாற் சீரால் வருவது.

உ - ம்: "தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா"

4. நெடிலடி :

ஐஞ் சீரான் வருவது.

உ - ம்: வென்றான் வினையின் றொகையாய் விரிந்து தன்கண் ".

5. கழிநெடிலடி :

ஐந்தின் மேற்பட்ட சீரான் வருவன எல்லாம் கழி நெடிலடியாகும்.

['மிக்க பாதம் கழிநெடில்'-உதாரணம்கூறி விளக்குக.

ஐஞ்சீரின் மிக்க சீரான் வரும் அடியெல்லாங் கழி நெடிலடியாகும் ]

உ - ம்: கணிகொண் டலர்ந்த நறவேங்கை யோடு கமழ்கின்ற காந்தளிதழால் (எழு சீராலாகியது.)

10. "வெள்ளைக் கிரண்டடி, வஞ்சிக்கு மூன்றடி மூன்றக வற்கெள்ளப் படாக்கலிக் கிரண்டாகு மிழிபுரைப் போர் உள்ளக் கருத்தி னளவே பெருமை"-விளக்குக. அல்லது, நான்கு பாக்களுக்குமுரிய அடியின் சிறுமை யும் பெருமையும் வரைக.

இச்சூத்திரம், அடிவரையறையான் வந்த நான்குபாவிற்கும் சிறுமை பெருமை கூறுகின்றது. வெண்பா, வஞ்சிப்பா, ஆசிரியப்பா, கலிப்பா இவற்றிற்கு முறையே இரண்டடியும், மூன்றடியும், நான்கடியும், சிறுமை யாகும். நான்கு பாவிற்கும் பெருமைக்கு எல்லை பாடுவோனது பொருண் முடிவுக் குறிப்பே. வரை யறை இல்லை.

'எள்ளப்படா கலிக்கு' என்று சிறப்பித்தவதனால் துள்ளலோசையில் சிறிதும் வழுவாது நாற்சீர் நாலடியான் வருவது தரவு கொச்சகக் கலிப்பா என்றும், துள்ளலோசையில் சிறிது வழுவி நாற்சீர் நாலடியான் வருவது கலி விருத்தம் என்றும் தெரிந்து உணரப்படும் என்பது பெறப்படுகின்றது.

சூத்திரம்.

'வெள்ளைக் கிரண்டடி வஞ்சிக்கு மூன்றடி மூன்றகவற
கெள்ளப் படாக்கலிக் கீரிரண்டாகு மிழிபுரைப்போர்
உள்ளக் கருத்தி னளவே பெருமையொண் போதலைத்த
கள்ளக் கருநெடுங் கட்சுரி மென்குழற் காரிகையே'

[யா. கா. 14]

[சூத்திரத்தில், 'வெள்ளைக் கிரண்டா மகவற்கு மூன்று கலிக்கடி நான்கெள்ளப் படாவஞ்சிப் பாவிற்கு மூன்றாம் இழிபு' என்று பாக்களை முறையிற் கூறாது தலை தடுமாற்றமாகச் சொல்ல வேண்டியது என்னையெனின், தலை தடுமாற்றம் தந்து புணர்த் துரைத்த லென்பது தந்திரவுத் தியாகலின். அன்றியும் மயேச்சுரர் முதலாகிய ஒருசார் ஆசிரியர் வஞ்சிப்பா இரண்டடியானும் வரப்பெறும் என்றார் என்பதும், ஆசிரியப்பா இரண்டடிச் சுரிதகமாய் வரப்பெறும் என்றார் என்பதும் அறிவித்தற்கு எனக்கொள்ளவேண்டும்.]

17. **மோனை முதலிய முதற்றொடைகளின் இலக்கணங்களை எழுதுக. [B. A. 1953]**

**அல்லது**

**தொடைகள் இன்னவென எழுதி உதாரணந் தந்து விளக்குக. [B. A. 1950]**

18. மோனைத் தொடையின் வகைகளைப் புலப்படுத்துக. [B. A. 1951]

19. தொடை விகற்பங்கள் எத்தனை? அவற்றின் வகையையும் இயல்பையும் விளக்குக. [Int. 1953]

20 மோனை விகற்பங்களைத் தந்து அவற்றின் இலக்கணங்களைத் தெரிவிக்க. [Int. 1953]

21. அடியியைபுத் தொடை, செந்தொடை, இரண்டின் இயல்பினையும் புலப்படுத்துக. [Int. 1953]

22. அடியியைபுத் தொடை, இரட்டைத்தொடை - இவற்றின் இயல்பினைப் புலப்படுத்துக. [Int. 1954]

23. அடியளபெடைத் தொடையை விளக்கி உதாரணம் தருக. [Int. 1952]

24. மேற்கதுவாயெதுகை, இணைமோனை - இவற்றை விளக்கி உதாரணம் தருக. [Int. 1951]

25. பலவகை மோனைகளையேனும், எதுகைகளையேனும் எடுத்துக் காட்டுடன் விளக்குக. [Int. 1950]

26. செந்தொடை என்பதனை விளக்கிப் பெயர்ப் பொருத்தத்தை ஆராய்க. உதாரணம் தருக. [Int. 1950]

27. செந்தொடை, மருட்செந்தொடை, பொழிப்புமோனை உதாரணத்துடன் விளக்குக. [M. A. 1955]

28. இணையியைபு, கூழை முரண், ஒரூஉ மோனை — இவற்றிற்கு விதி கூறி உதாரணமும் தருக. [M. A, 1952]

29. பின்வரும் பகுதியில் இரண்டன் தொடை விகற்பங்களைக் காட்டுக. [M. A. 1951]

(1) 'அணிமலை ரசோகின் தளிர்நலங் கவற்றி
அரிக்குரற் கிண்கிணி யரற்றுஞ் சீறடி'

(2) 'குவிந்து சுணங் கரும்பிய கொங்கை விரிந்து
சிறிய பெரிய நிகர் மலர்க் கோதை.'

(3) 'அன்ன மென்பெடை போலப் பன்மலர்க்
கன்னியம் புன்னை யின்னிழற் றுன்னிய.'

30. இணையியைபு, கீழ்க்கதுவாய் மோனை, கூழை எதுகை, ஒரூஉமுரண், பின்முரண், பொழிப்பளபெடை—இவற்றுள் எவையேனும் இரண்டு தொடைகளை எடுத்துக் காட்டுக்கள் தந்து விளக்குக.
[M. A. 1949]

31. பொழிப்பு மோனை, ஒரூஉ எதுகை, கூழை முரண், கீழ்க்கதுவாய் அளபெடை - இத்தொடைகளை எடுத்துக் காட்டுக்கள் தந்து விளக்குக. [M. A. 1948]

32. அடியியைபுத் தொடை, செந்தொடை, மேற்கதுவாயெதுகை - இவற்றின் இயல்பினைப் புலப்படுத்துக.
[Int. 1955]

33. கூழை மோனை, அடியியைபு - இவற்றை விளக்கி உதாரணம் தருக. [Int. 1955]

தொடையின் வகை : தொடை எட்டு வகைப்படும்.

அவையாவன : 1) மோனைத்தொடை 2) இயைபுத்தொடை 3) எதுகைத்தொடை 4) முரண்தொடை 5) அளபெடைத்தொடை 6) அந்தாதித்தொடை 7) இரட்டைத் தொடை 8) செந்தொடை.

1) மோனைத்தொடை :

அடிதோறும் முதல் எழுத்து ஒன்றி வரத்தொடுப்பது அடிமோனைத் தொடையாகும்.

உ-ம்: 'தம்பொருள் என்பதம் மக்கள் அவர் பொருள் தந்தம் வினையான் வரும்.'

2) இயைபுத்தொடை :

அடிதோறும் இறுதிக்கண்ணின்ற எழுத்தானும் சொல்லானும் ஒன்றிவரத் தொடுப்பது அடியியைபுத் தொடையாகும்.

" இன்னகைத் துவர்வாய்க் கிளவியு மணங்கே
நன்மா மேனிச் சுணங்குமா ரணங்கே
ஆடமைத் தோளி யூடலு மணங்கே
அரிமதர் மழைக்கணு மணங்கே
திருநுதற் பொறித்த திலகமு மணங்கே."

(இங்கு அடிதோறும் இறுதிச் சீர் ஒன்றிவரத் தொடுத்தமையால் அடியியைபுத் தொடையாகும்.)

3) எதுகைத்தொடை :

அடிதோறும் முதற்கண் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடியெதுகைத் தொடையாகும்.

உ-ம்: ' நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்."

4) முரண்தொடை :

அடிதோறும் முதற்கண் சொல்லேனும், பொருளேனும், மறுதலைப்படத் தொடுப்பது அடிமுரண் தொடை எனப்படும்.

" இருள்பரந் தன்ன மாநீர் மருங்கில்
நிலவுக்குவித் தன்ன வெண்மணை லொருசிறை
இரும்பி னன்ன கருங்கோட்டுப் புன்னை
பொன்னி னன்ன நுண்டா துறைக்குஞ்
சிறுகுடிப் பரதவர் மடமகள்
பெருமதர் மழைக்கணு முடையவா லணங்கே "

5) அடியளபெடைத்தொடை :

அடிதோறும் முதற்கண் உயிரானும், ஒற்றானும் அளபெடுத்தொன்றிவரத் தொடுப்பது அடியளபெடைத் தொடையாகும்.

"ஆஅ வளிய வலவன்றன் பார்ப்பினோ
மஇ ரிரையுங்கொண் மாலைப் பள்ளியுட்
டூஉந் திரையலைப்பத் துஞ்சா திறைவன்றோள்
மேஎ வலைப்பட்ட நம்போ னறுநுதால்
ஓஒ வுழக்குந் துயர்"

6) அந்தாதித்தொடை :

அடிதோறும் இறுதிக் கண்ணின்ற எழுத்தானும், அசையானும், சீரானும், அடியானும் மற்றைய அடிக்கு ஆதியாகத் தொடுப்பது அந்தாதித் தொடையாகும்.

" உலகுடன் விளக்கு மொளிதிக ழவிர்மதி
மதிநல னழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி யறிவனை
அறிவுசே ருள்ளமோ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்த ரென்ப
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை யுலகே "

(இது நான்கந்தாதித் தொடையும் வந்த செய்யுள்.)

7) இரட்டைத்தொடை :

ஓரடி முழுதும் ஒரு சொல்லே வரத் தொடுப்பது.

" ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும்
விளக்கினிற் சீறெரி யொக்குமே யொக்குங்
குளக்கொட்டிப் பூவி னிறம் "

8) செந்தொடை :

மோனை முதலான தொடைகளும், தொடை விகற்பங்களும் வாராமல் தொடுப்பது.

" பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலினம் பகவு நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத் தகத்தோனே "

[மருட்செந்தொடை : இன எழுத்துப் பெற்று, மோனை முதலாகிய தொடையும், தொடை விகற்பமும் போலாமை வேறுபடத் தொடுப்பது மருட் செந்தொடையாகும்.

உ-ம் : ' அமிழ்தினு மாற்ற வினிதே தம்மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.']

14. செந்தொடைக்கும் மருட் செந்தொடைக்கும் உள்ள வேற்றுமையினை விளக்கி வரைக.

இதற்குரிய விடை மேலலே தரப்பட்டுள்ளது.

தொடை விகற்பங்கள்.

1) மோனைத்தொடை : (8)

1. அடிமோனை 2. இணைமோனை 3. பொழிப்பு மோனை 4. ஒரூஉ மோனை 5. கூழைமோனை

6. மேற்கதுவாய் மோனை 7. கீழ்க்கதுவாய் மோனை 8. முற்று மோனை.

2) **இயைபுத் தொடை** (8)

1. அடியியைபு 2. இணையியைபு 3. பொழிப்பியைபு 4. ஒரூஉவியைபு 5. கூழையியைபு 6. மேற்கதுவாயியைபு 7. கீழ்க்கதுவாயியைபு. 8. முற்றியைபு.

3) **எதுகைத்தொடை** (8)

1. அடியெதுகை 2. இணையெதுகை 3. பொழிப்பெதுகை 4. ஒரூஉவெதுகை 5 கூழையெதுகை 6. மேற்கதுவாயெதுகை 7. கீழ்க்கதுவாயெதுகை 8. முற்றெதுகை.

4) **முரண்தொடை** (8)

1. அடிமுரண் 2. இணைமுரண் 3. பொழிப்புமுரண் 4. ஒரூஉமுரண் 5. கூழைமுரண் 6. மேற்கதுவாய்முரண் 7. கீழ்க்கதுவாய்முரண் 8. முற்றுமுரண்.

5) **அளபெடைத்தொடை** (8)

1 அடியளபெடை 2. இணையளபெடை 3. பொழிப்பளபெடை 4. ஒரூஉவளபெடை 5) கூழையளபெடை 6. மேற்கதுவாயளபெடை 7. கீழ்க்கதுவாய் அளபெடை 8. முற்றளபெடை.

**குறிப்பு.**

[**தொடை விகற்பம்** : மோனை, இயைபு, எதுகை, முரண், அளபெடை, என்ற ஐந்து தொடைகளும், அடி, இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய்,

கீழ்க்கதுவாய், முற்று என்னும் எட்டுடனும் தனித் தனி இயைந்து வருதல் தொடை விகற்பம் எனப் படும். இத்தொடை விகற்பம் நான்கு சீர் உள்ள அடிகளில்தான் வருவனவாகும்.]

**விளக்கம் :**

1) **இணை :** முதலிரு சீர்க் கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது இணை எனப்படும்.

2) **பொழிப்பு :** முதற் சீர்க்கண்ணும், மூன்றாஞ் சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது பொழிப்பு எனப்படும்.

3) **ஒரூஉ :** நடுவிரு சீர்க் கண்ணுமின்றி முதற்சீர்க்கண்ணும், இறுதிச் சீர்க் கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது.

4) **கூழை :** இறுதிச் சீர்க்கணின்றி, ஒழிந்த மூன்று சீர்க் கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது.

5) **மேற்கதுவாய் :** முதல் அயற்சீர்க்கண் இன்றி, ஒழிந்த மூன்றுசீர்க் கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பது.

6) **கீழ்க்கதுவாய் :** ஈற்று அயற்சீர்க்கண் இன்றி ஒழிந்த மூன்றுசீர்க் கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பது.

7) **முற்று :** எல்லாச் சீர்க் கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது.

குறிப்பு.

யாதானும் ஓர் அடியில் அமைந்துள்ள தொடை விகற் பத்தைக் கண்டு பிடித்தற்குரிய நெறி பின் வருமாறு :

முதலில் அவ்வடியில் மோனை முதலாகிய ஐந்தனுள் எத்தொடை அமைந்துள்ளது என்று காணவேண்டும். அதன் பின் எந்தெந்த சீர்களில் அத்தொடை அமைந்துள்ளது என்று அறியவேண்டும். ஓரடியில் மோனைத் தொடை அமைந்து அதுவும் முதல் இரு சீர்க் கண்ணும் இருக்குமானால் அதனை இணைமோனைத்தொடை எனக் கூறவேண்டும். இது போன்றே ஏனையவற்றையும் காண்க.

**சூத்திரங்கள்.**

1. ‘எழுவா யெழுத்தொன்றின் மோனை யிறுதி
யியைபிரண் டாம்
வழுவா வெழுத்தொன்றின் மாதே யெதுகை
மறுதலைத்த
மொழியான் வரினு முரணடி தோறு முதன்மொழிக்கண்
அழியா தளபெடுத் தொன்றுவ தாகு மளபெடையே.’
[யா. கா. 16

2. ‘அந்த முதலாத் தொடுப்பதந் தாதி யடிமுழுதும்
வந்த மொழியே வருவ திரட்டை வரன் முறையான்
முந்திய மோனை முதலா முழுதுமொவ் வாது
விட்டால்
செந்தொடை நாமம் பெறுநறு மென்குழற்
றேமொழியே.’ [யா. கா. 17]

3. ‘இருசீர் மிசையிணை யாகும் பொழிப்பிடை
யிட்டொருவாம்
இருசீ ரிடையிட்ட தீறிலி கூழை முதலிறுவாய்

வருசீ ரயலில மேல்கீழ் வகுத்தமை தீர்கதுவாய்
வருசீர் முழுவது மொன்றின்முற் றுமென்ப
மற்றவையே.' [யா. கா. 19]

['எழுவா' என்று தொடங்கும் சூத்திரத்தில், 'வழுவா வெழுத்து' என்று மிகுத்துச் சொல்லியவதனால், இரண்டாம் எழுத்து ஒன்றிவரினும் முதல் எழுத்தெல்லாம் தம்முள் ஒத்த அளவினவாய் வந்து கட்டு என்பதற்குப் பட்டு என்பது அல்லது பாட்டு என்பது எதுகையாகாது; காட்டு என்பதற்குப் பாட்டு என்பதல்லது பட்டு என்பது எதுகையாகாது எனக் கொள்ளவேண்டும். 'மொழியான் வரினும்' என்ற உம்மையால் பொருளால் வரினும் என்பதாயிற்று. 'அழியாது' என்று மிகுத்துச் சொல்லியவதனால் நான்கு உயிரளபெடையும், இரண்டு ஒற்றளபெடையும் ஒன்றிவரத் தொடுப்பது சிறப்புடைத்து. தொடை விகற்பத்துள் நான்கு உயிரளபெடையும், இரண்டு ஒற்றளபெடையும் தம்முள் மறுதலைப் படத்தொடுப்பினும் இழுக்காது எனக் கொள்ள வேண்டும்.

'அந்த முதலா' என்று தொடங்கும் சூத்திரத்தில், 'வரன் முறையான்' என்று மிகுத்துச் சொல்லியவதனால், ஈற்றெழுத்து ஒன்று குறையினும் இழுக்காது; நாற்சீரின் மிக்கு வரப்பெறாது எனக் கொள்ளவேண்டும். 'முந்திய மோனை' என்று கூறியவதனால் அசையும், சீரும் தம்முள் மறுதலைப் படத் தொடுப்பது சிறப்புடைத்து எனக் கொள்ள வேண்டும்.

'இருசீர்' என்று தொடங்கும் சூத்திரத்தில், முதலயற் சீர்க்கண் இல்லாததனைக் கீழ்க்கதுவாய் என்றும், ஈற்

றயற்சீர்க்கண் இல்லாததனை மேற்கதுவாய் என்றும் வேண்டினர் கையனர் முதலிய ஒருசார் ஆசிரியர் என்பது அறிவித்தற்கு 'மைதீர் கதுவாய்' என்று விதப்புரைத்தார். 'வருசீர்' என்று சிறப்பித்தது இணைமோனை முதலாகிய முப்பத்தைந்து தொடை விகற்பமும் அளவடிக்கண்ணே வழங்கப்படும் என்பதும், இணையியைபு முதலாகிய ஏழு விகற்பமும் இறுதிச் சீரே முதற் சீராகக்கொண்டு வழங்கப்படும் என்பதும், அறிவித்தற்காகும்.]

## உதாரணப் பகுதிகள்.

**1) மோனை விகற்பம் :**

'அணிமல ரசோகின் றளிர்நலங் கவற்றி (இணைமோனை)
அரிக்குரற் கிங்கிணி யாற்றுஞ் சீறடி (பொழிப்புமோனை)
அம்பொற் கொடிஞ்சி நெடுந்தே ரகற்றி (ஒரூஉமோனை)
அகன் வல்கு லந்துண் மருங்குல் (கூழைமோனை)
அரும்பிய கொங்கை யவ்வளையமைத்தோள்
(மேற்கதுவாய்மோனை)
அவிர்மதி யனைய திருநுத லரிவை (கீழ்க்கதுவாய்மோனை)
அயில்வே லனுக்கி யம்பலைத் தமர்த்த (முற்றுமோனை)
கருங்கய னெடுங்க ணோக்க மென்
திருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே.'

**2) இயைபு விகற்பம் :**

'மொய்த்துடன் றவழு முகிலே பொழிலே (இணையியைபு)
மற்றத னயலே முத்துறழ் மணலே (பொழிப்பியைபு)
நிழலே யினியத னயலது கடலே (ஒரூஉவியைபு)
மாதர் நகிலே வல்லே யியலே (கூழையியைபு)

வில்லே நுதலே வேற்கண் கயலே (மேற்கதுவாயியைபு)
பல்லே தவளம் பாலே சொல்லே (கீழ்க்கதுவாயியைபு)
புயலே குழலே மயிலே யியலே (முற்றியைபு)
(அதனால்;) இவ்வயினிவ்வுரு வியங்கலின்
எவ்வயி னோரு மிழப்பர்தந் நிறையே.'

3) **எதுகை விகற்பம்:**

'பொன்னி னன்ன பொறிசுணங் கேந்திப் (இணையெதுகை)
நன்னருங் கோங்கி னன்னலங் கவற்றி (பொழிப்பெதுகை)
மின்னிவ ரொளிவடந் தாங்கி மன்னிய (ஒரூஉவெதுகை)
நன்னிற மென்முலை மின்னிடை வருத்தி (கூழையெதுகை)
என்னகை யிடுக்கண் டுன்னுவித் தின்னடை
(மேற்கதுவாயெதுகை)
அன்ன மென்பெடை போலப் பன்மலர்க்
(கீழ்க்கதுவாயெதுகை)
கன்னியம் புன்னை யின்னிழற் றுன்னிய (முற்றெதுகை)
மயிலேய் சாயலவ் வாணுதல்
அயில்வே லுண்கணெம் மறிவு தொலைத்ததுவே'.

4) **முரண் விகற்பம்:**

'சிறடிப் பேரக லல்கு லொல்குபு (இணைமுரண்)
சுருங்கிய நுசுப்பிற் பெருகு வடந்தாங்கிக்
(பொழிப்புமுரண்)
குவிந்து சுணங்கரும் பியகொங்கை விரிந்து (ஒரூஉமுரண்)
சிறிய பெரிய நிகர்மலர்க் கோதை தன் (கூழைமுரண்)
வெள்வளைத் தோளுஞ் சேயரிக் கருங்கணும்
(மேற்கதுவாய்முரண்)
இருக்கையு நிலையு மேந்தெழி லியக்கமும்
(கீழ்க்கதுவாய்முரண்)

துவர்வாய்த் தீஞ்சொ லு முவந்தெனே முனியா
(முற்றுமுரண்)
தென்று மின்னண மாகுதி
பொன்றிகழ் நெடுவேற் போர்வல் லோயே'.

5) அளபெடை விகற்பம்:

"தா அட் டா அ மரைமல ருழக்கிப் (இணையளபெடை)
பூஉக் குவளைப் போஒ தருந்திக் (பொழிப்பளபெடை)
கா அய்ச் செந்நெற் கறித்துப் போஒய் (ஒரூஉவளபெடை)
மா அத் தா அண் மோஒட் டெருமை (கூழையளபெடை)
தேஎம் புனலிடைச் சேஒர்பா அல்
(மேற்கதுவாயளபெடை)
மீஇ ஞஅர்ந் துகளுஞ் சீஇர் (கீழ்க்கதுவாயளபெடை)
ஆஅ ஞஅ நீஇ ணீஇர்
ஊரன் செய்த கேண்மை
ஆய்வளைத் தோளிக் கலா ஞவே."

---

## செய்யுளியல்

1) பாக்களும் அவற்றிற்குரிய அடிகளும் ஒலியுங் கூறுக.
[Inter. 1951, 52]

| பாக்கள் | அடி | ஒலி |
|---|---|---|
| 1) வெண்பா | ... நாற்சீரடியான் வரப்பெறும் | ... செப்பலோசை |
| 2) ஆசிரியப்பா ... | ,, | .. அகவலோசை |
| 3) கலிப்பா ... | ,, | ... துள்ளலோசை |
| 4) வஞ்சிப்பா | ... இருசீரடியானும் முச்சீரடியானும் வரப்பெறும் | ... தூங்கலோசை |

[சூத்திரத்தில் 'வஞ்சி என்னும் ஒண்பா' என்று சிறப்பித்த வதனால் வெண்பாவின் ஈற்றடியும், நேரிசை ஆசிரியப்பாவின் ஈற்றயலடியும், கலிவெண்பாவின் ஈற்றடியும், முச்சீரான் வரப்பெறும் என்பதும்; இணைக் குறளாசிரியப்பாவின் இடையடிகள் இரண்டும், பலவும், குறளடியானும் சிந்தடியானும் வரப்பெறும் என்பதும்; கலியினுள்ளும் ஒருசார் அம்போதரங்க உறுப்பும் இருசீரடியானும், முச்சீரடியானும் வரப்பெறும் என்பதும்; பெறப்படும்.]

2) **செப்பலோசையின் விகற்பங்களையேனும், அகவலோசையின் விகற்பங்களையேனும் எடுத்துக்காட்டுடன் விளக்குக.** [Inter. 1950]

3) **துள்ளலோசை, தூங்கலோசை இவற்றின் விகற்பங்களை எடுத்தெழுதுக.**

1) செப்பலோசை :

சூத்திரத்தில் 'திண்பாமலி செப்பல்' என்று சிறப்பித்தவதனால் செப்பலோசை மூன்று வகைப்படும். அவை யாவன, 1. ஏந்திசைச் செப்பல் 2. தூங்கிசைச் செப்பல் 3. ஒழுகிசைச் செப்பல்.

1. வெண்சீர் வெண்டளையான் வருவது ஏந்திசைச் செப்பலோசையாகும்.
'யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு'. (உ-ம்)

2. இயற்சீர் வெண்டளையான் வருவது தூங்கிசைச் செப்பலோசையாகும்.
'பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்' (உ-ம்)

3 வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையும் விரவி வருதல் ஒழுகிசைச் செப்பலோசையாகும்.

'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்'. (உ-ம்)

2) **அகவலோசை:**

'சீர் சாலகவல்' என்று சிறப்பித்தவதனால், அகவலோசை, ஏந்திசை அகவல், தூங்கிசை அகவல், ஒழுகிசை அகவல் என மூன்று வகைப்படும்.

1. நேரொன்றாசிரியத்தளையால் வருவது ஏந்திசை அகவலோசையாகும்.

'போது சாந்தம் பொற்ப வேந்தி
ஆதி நாதற் சேர்வோர்
சோதி வானந் துன்னு வாரே'. (உ-ம்)

2. நிரையொன்றாசிரியத்தளையால் வருவது தூங்கிசை அகவலோசை

'அணிநிழ லசோகமர்ந் தருணெறி நடாத்திய
மணிதிக ழவிரொளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப் பவரே.' (உ-ம்)

3. நேரொன்றாசிரியத்தளையும், நிரையொன்றாசிரியத்தளையும் விரவி வருவது ஒழுகிசை அகவலோசையாகும்.

'குன்றக் குறவன் காதன் மடமகள்
வரையர மகளிர் புரையுஞ் சாயலள்
ஐய ளரும்பிய முலையள்
செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே.' (உ-ம்)

3) துள்ளலோசை :

'சென்றேங்கு துள்ளல்' என்று கூறியவதனுல், துள்ளலோசை, ஏந்திசைத் துள்ளல், அகவற்றுள்ளல், பிரிந்திசைத் துள்ளல் என மூன்றுவகைப்படும்.

1. கலித்தளேயான் வருவது ஏந்திசைத் துள்ளலாகும்.

'முருகவிழ்தா மரைமலர்மேன் முடியிமையோர்
புடைவரவே
வருகின்ஞர் தருமறைநூல் வழிபிழையா மனமுடையார்
இருவினைபோய் விழமுனியா வெதிரியகா தியையரியா
திருமலரா யருளினராய் நிலவுவர்சோ தியினிடையே'
(உ—ம்.)

2. வெண்சீர் வெண்டளேயும், கலித்தளேயும் விரவி வருவது அகவல் துள்ளல் ஓசையாகும்.

'செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ விடைநுழையு மதியம்போல்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்தே
(உ—ம்.)

3. பலதளேயும் விரவிவருவது பிரிந்திசைத் துள்ளலோசையாகும்.

'குடநிலைத் தண்புறவிற் கோவல ரெடுத்தார்ப்பத்
தடநிலைப் பெருந்தொழுவிற் றகையேறு மரம்பாய்ந்து
வீங்குமணிக் கயிறெரீஇத் தாங்குவனத் தேறப்போய்க்
கலையினெடு முயலிரியக் கடிமுல்லை முறுவலிப்ப
எனவாங்கு,
ஆனெடு புல்லிப் பெரும்புதன் முனையுங்
கானுடைத் தவர்தேர் சென்ற வாறே' (உ-ம்.)

4) தூங்கலோசை :

'நண்பாவமைந்த நலமிகு தூங்கல்' என்று கூறிய வதனால், ஏந்திசைத் தூங்கல், அகவற்றூங்கல், பிரிந்திசைத் தூங்கல், எனத் தூங்கலோசை மூன்றுவகைப்படும்.

1. ஒன்றிய வஞ்சித் தளையால் வருவது ஏந்திசைத் தூங்கலோசையாகும்.

'வினைத்திண்பகை விழச்செற்றவன்
வனப்பங்கய மலர்ந்தாளிணை
நினைத்தன்பொடு தொழுதேத்தினர்
நாளும்,
மயலார் நாற்கதி மருவார்
பெயரா மேற்கதி பெறுகுவர் விரைந்தே' (உ-ம்)

2. ஒன்றாத வஞ்சித்தளையால் வருவது அகவற்றூங்கலோசையாகும்.

'வானோர்தொழ வண்டாமரைத்
தேனார்மலர் மேல்வந்தருள்
ஆனாவருள் கூறிவனைக்
காணார்,
மலர்கொண் டேத்தி வணங்குநர்
பலர்புகழ் முத்தி பெறுகுவர் விரைந்தே.' (உ-ம்)

3. பலதளையும் விரவி வருவது பிரிந்திசைத் தூங்கலோசையாகும்.

'மந்தாநிலம் வந்தசைப்ப
வெண்சாமரை புடைபெயர்தரச்
செந்தாமரை நாண்மலர்மிசை
எனவாங்கு
இனிதி னொதுங்கிய இறைவனை
மனமொழி மெய்களின் வணங்குது மகிழ்ந்தே' (உ-ம்)

### சூத்திரம்

'வெண்பா வகவல் கலிப்பா வளவடி வஞ்சி யென்றும்
ஒண்பா வடிகுறள் சிந்தென் றுரைப்ப வொலிமுறையே
இண்பா மலிசெப்பல் சீர்சா லகவல்சென் றேங்குதுள்ளல்
நண்பா வமைந்த நலமிகு தூங்கல் நறுநுதலே'

[யா. காரிகை—22]

**4) வெள்ளப, ஆசிரியப்பா, கலிப்பா வஞ்சிப்பா என்னும் இந்த முறைக்கு என்ன காரணம்? [Int. 55]**

நாற்சீர் அடியால் நடைபெறுதலும், வேற்றுப் பாவினுவிருமையும், எல்லாப் பொருண்மேலும் சொல்லப் படும் என்றிவற்றால் ஆசிரியத்தோடு ஒத்தலும், உயர்ந்த ஓசைத்தாகலும், உத்தம சாதியாகலும் வேற்றுத் தளையும் வேற்றடியும் வேற்றுப்பாவும் விரவாமையும் என்னும் அதிக குணமுடைமை நோக்கியும், வேதியர் குணத்தினதாகல் கருதியும், வெண்பா ஆசிரியப்பாவின் முன்னர் வைக்கப் பட்டது.

அளவடியால் நடைபெறுதலும், தனது நடையால் தான் இனிதுறுதலும், எல்லாப் பொருள்களையும் தன் கண்ணே அடக்கலும், ஒரு வாத பொருளிற்றுதலும், ஒரு புடையால் வெண்பாவோடு ஒத்தலும், அகவிய ஓசைத் தாகலும், அரசர் குலனத்தினது ஆகலும், வேற்றுத் தளை யும் அடியும் விரவி வருதலும் என்னும் வேறுபாடு உடைமை நோக்கி வெண்பாவின் பின் வைக்கப்பட்டது ஆசிரியப்பா.

நேரடியால் நிலைபெறுதலும், அயலடியும் அயற் றளையும் விரவி வருதலும், இவ்வாற்றான் ஆசிரியத்தோடு

ஒத்தலும், அயற்பாவினுள் இறுதலும், புறநிலை வாழ்த்து முதலிய பொருள்கண்மேற் புகாமையும், வணிகர் குலத் தினதாகலும், துள்ளல் ஓசைத்தாகலும் நோக்கி ஆசிரியத்தின் பின் வைக்கப்பட்டது கலிப்பா.

புறநிலை வாழ்த்து முதலிய பொருண்மேற் புகாமையும், அயற்றளையும், அயலடியும் விரவி வருதலும், அயற்பாவினுல் இறுதலும் என்றிவற்றுல் கலிப்பாவினோடு ஒத்தலும், நாற்சீரடியால் நடவாமையும், சூத்திர குலத்தின தாகலும், தூங்கலோசைத்தாகலும், அகப்பொருள் கண்மேலருகியன்றி வாராமையும் நோக்கிக் கலிப்பாவின் பின் வஞ்சிப்பா வைக்கப்பட்டது.

5) **வெண்பாவின் இலக்கணத்தையும் அதன் வகைகளையும் குறிப்பிடுக.**

செப்பலோசை உடையதாய், ஈற்றடி முச்சீராய் ஏனையடி நாற்சீராய், வெண்சீரும் இயற்சீரும் வந்து, வெண்டளைதட்டு, வேற்றுத்தளை விரவாது, காசு, பிறப்பு, நாள், மலர் என்னும் வாய்பாட்டால் முடிவது வெண்பா ஆகும். அவ்வெண்பா, குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா என அறுவகைப்படும்

6) **குறள் வெண்பாவின் இலக்கணத்தை வரைந்து எடுத்துக்காட்டொன்று தருக.**

இரண்டடியாய் ஒரு விகற்பத்தாலேனும் இரு விகற்பத்தாலேனும் வருவது குறள் வெண்பா ஆகும்.

உ-ம் :—

1) 'உடையார் முன் னில்லார்போ லேக்கற்றுங் கற்றூர்
கடையரே கல்லா தவர்.' (ஒரு விகற்பத்தான் வந்த
கு. வெண்பா)

2) 'உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்
தேர்க்
கச்சாணி யன்னு ருடைத்து.' (இரண்டு விகற்பத்தான்
வந்த குறள் வெண்பா.)

7) நேரிசை வெண்பா - இலக்கணம் தருக. [Int. 1954]

அல்லது

நேரிசை வெண்பாவின் வகைகளை விளக்குக.

[Int. B. A. 1950]

நான்கடியாய் இரண்டாம் அடி இறுதிச் சீர் முதற் றொடைக்கேற்ற தனிச் சொல்லாய் வர, அடி முழுதும் ஒரெ துகையாகவேனும், முன்னிரண்டும் ஒரெ துகையும், பின்னிரண்டும் மற்ருேர் எதுகையுமாகவேனும் வருவது நேரிசை வெண்பா ஆகும். அது ஒரு விகற்ப நேரிசை வெண்பா, இரு விகற்ப நேரிசை வெண்பா என இரு வகைப்படும்.

உ—ம் :

1) 'வஞ்சியே னென்றவன்ற னூருரைத்தான் யானுமவன்
வஞ்சியா னென்பதனுல் வாய்நேர்ந்தேன்-வஞ்சியான்
வஞ்சியேன் வஞ்சியே னென்றுரைத்தும்
வஞ்சித்தான்
வஞ்சியாய் வஞ்சியார்கோ'. (இரண்டு விகற்பத்தான்
வந்தது.)

2) 'தடமண்டு தாமரையின் றாதா டலவன்
இடமண்டிச் செல்வதனைக் கண்டு-பெடைஞெண்டு
பூழிக் கதவடைக்கும் புத்தூரே பொய்கடிந்
தூழி நடாயினா னூர்'. (இரண்டு விகற்பத்தான் வந்தது.)

8) **இன்னிசை வெண்பாவின் இலக்கணத்தையும் அதன் பல்வேறு விகற்பங்களையும் எழுதுக.** [M. A 1951]

*அல்லது*

**இன்னிசை வெண்பாவின் வகைகளை விளக்குக.**

[B. A. 1950]

ஒரு விகற்பத்தாலேனும், பல விகற்பத்தாலேனும் நான்கடியாய்த் தனிச் சொல் இன்றி வருவது இன்னிசை வெண்பாவாகும்.

உ-ம்: 'வைகலும் வைகல் வரக் கண்டும் அஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாள்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்.'

(ஒரு விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா.)

'கடற்குட்டம் போழ்வர் கலவர் படைக்குட்டம்
பாய்மா வுடையா னுடைக்கிற்குந் தோமில்
தவக்குட்டந் தன்னுடையா னீந்தும் அவைக்குட்டம்
கற்றான் கடந்து விடும்.'

(பலவிகற்பத்தான் வந்த செய்யுள்.)

[சூத்திரத்தில், 'துன்னும்' என்று மிகுத்துச் சொல்லிய வதனால், இரண்டாம் அடியின் இறுதி தனிச் சொற்

பெற்று மூன்று விகற்பத்தான் வருவனவும், மூன்றும் அடியின் இறுதி தனிச் சொற்பெற்று இரண்டு விகற்பத்தான் வருவனவும், தனிச்சொல் இன்றிப் பல விகற்பமாகி அடி தோறும் ஒரூஉத் தொடைபெற்று வருவனவும், பிறவாற்றானும் நேரிசை வெண்பாவிற் சிறிது வேறுபட்டு நான்கடியான் வருவனவும், இன்னிசை வெண்பா ஆகும்.]

9) பஃறொடை வெண்பாவின் இலக்கணத்தை எழுதி உதாரணமொன்று தருக.

நான்கடியின் மிக்க பல அடியால் வருவது பஃறொடை வெண்பா ஆகும்.

உ-ம்: 'பன்மாடக் கூடல் மதுரை நெடுந்தெருவில்
என்னோடு நின்றார் இருவர் அவருள்ளும்
பொன்னோடை நன்றென்றா ளல்லளே
பொன்னோடைக்
கியானைநன் றென்றாளு மந்நிலையள் யானை
எருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன்
றிருத்தார்நன் றென்றேன் றியேன்.'

(இது ஆறடியான் வந்த பல விகற்பப்பஃறொடை வெண்பாவாகும்.)

10) சிந்தியல் வெண்பா-இலக்கணம் தருக. [Int. 1954]

மூன்றடியாய் நேரிசை வெண்பாவைப் போல வருவது நேரிசைச் சிந்தியல் வெண்பா என்றும், இன்னிசை வெண்பாவைப் போல வருவது இன்னிசைச் சிந்தியல் வெண்பா என்றும் பெயர் பெற்று வரும்.

1) நேரிசைச் சிந்தியல் வெண்பா :

'அறிந்தானை யேத்தி யறிவாங் கறிந்து
சிறந்தார்க்குச் செல்வ னுரைப்ப - சிறந்தார்
சிறந்தமை யாராய்ந்து கொண்டு'. (உ-ம்)

(இது இரண்டாமடியின் இறுதி தனிச் சொற்பெற்று ஒரு விகற்பத்தால் வந்த நேரிசைச் சிந்தியல் வெண்பா ஆகும்.)

2) இன்னிசைச் சிந்தியல் வெண்பா :

1) 'சுரையாழ வம்மி மிதப்ப - வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலை யென்ப
கானக நாடன் சுனை.' (உ-ம்)

2) 'முல்லை முறுவலித்துக் காட்டின - மெல்லவே
சேயிதழ்க் காந்தள் துடுப்பீன்ற - போயினார்
திண்டேர் வரவுரைக்குங் கார்.' (உ-ம்)

(இவை தனிச்சொல் இன்றிப் பல விகற்பத்தான் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா ஆகும்.)

11) **வெண்பாவின் பாவினங்களை விளக்குக.** [Int. 1950]

அல்லது

**வெண்பாவினங்களின் இலக்கணத்தை வரைந்து ஒன்றற்கு உதாரணம் தருக.** [B. A. 1952]

## வெண்பா இனம்

1) **குறள் வெண்பா இனம் :**

குறள் வெண்பாவிற்குக் குறள்வெண் செந்துறையும் குறட்டாழிசையும் இனமாகும்.

1) வெண்செந்துறை (குறள் வெண் செந்துறை)

இரண்டடியாய்த் தம்முள் அளவொத்து வருவது வெண் செந்துறையாகும். இதனைச் செந்துறை வெள்ளை எனவும் வழங்குவர்.

[சூத்திரத்தில் 'அந்த மில் பாதம்' என்று கூறியவதனல், விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் இதற்கு உரியன என்பது பெறப்படும்.]

உ-ம்: 'ஆர்கலி யுலகத்து மக்கட்கு எல்லாம்
ஓதலிற் சிறந்தன்று ஒழுக்க முடைமை.

2) குறட்டாழிசை (தாழிசைக்குறள்):

நாற்சீரின் மிக்க பல சீரான் வந்த அடி இரண்டாய் ஈற்றடி குறைந்து வருவது குறட்டாழிசை ஆகும்.

'நண்ணு வார்வினை நையநாடொறு நற்றவர்க்கரசாயஞானநற்
கண்ணி னடியேயடை வார்கள் கற்றவரே'. (உ-ம்)

(ஈற்றடி குறைந்து இரண்டடியாய்ப் பல சீரான் வந்தது.)

அடி இரண்டாய் அளவொத்து விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் இன்றி செந்துறை வெள்ளையிற் சிதைந்து வருவது செந்துறைச் சிதைவுத் தாழிசைக் குறள் எனப் படும்.

உ-ம்: 'பிண்டியி னீழற் பெருமான் பிடர்த்தலை
மண்டலந் தோன்றுமால் வாழி யன்னய்'

(விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையுமின்றி இரண்டடியும் தம்முள் ஒத்துவந்துள்ளது.)

செப்பல் ஓசையிற் சிதைந்து வேற்றுத்தளை தட்டுக் குறள் வெண்பாவில் சிதைந்து வருவதும் குறட்டாழிசை எனப்படும்.

உ-ம்: 'வண்டார் பூங்கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்
பண்டை யளல்லள் படி'.

(இது சந்தம் சிதைந்த தாழிசைக் குறளாகும்.)

2) **பிற வெண்பாக்களின் இனம்:**

1. வெளி விருத்தம் 2. வெண்டாழிசை
3. வெண்டுறை

1) **வெளிவிருத்தம்:**

மூன்று அடியானும் முற்றுப்பெற்று அடிதோறும் ஒரு சொல்லே இறுதிக் கண் தனிச் சொல்லாய் வருவது வெளி விருத்தமாகும். (சூத்திரத்தில் 'மூன்றடியானும்' என்ற உம்மையால் நான்கடியாலும் வரப்பெறும் எனக் கொள்க. 'தண்டா விருத்தம்' எனக் கூறியதனால் நாற்சீரடியுட்பட்டு அடங்காது வேறாய் வருவது ஈண்டுத் தனிச் சொல் எனக்கொள்க)

உ-ம்: 'கொண்டன் முழங்கினவாற் கோபம்
பரந்தனவா-லென் செய்கோ யான்
வண்டு வரிபாட வார்தளவம் பூத்தனவா-லென்
செய்கோயான்
எண்டிசையுந் தோகை யிருந்தகவி
யேங்கினவா-லென் செய்கோயான்'

(இது மூன்றடியால் என்செய்கோயான் என்னும் தனிச்சொல் பெற்று வந்த வெளி விருத்தமாகும்.)

2) வெண்டாழிசை (வெள்ளொத்தாழிசை)

மூன்றடியாய் ஈற்றடி வெண்பாவேபோல முச்சீரடி யால் இறுவது வெண்டாழிசையாகும்.

'நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யார்
அன்பு வேண்டு பவர்.'

(மூன்றடி, ஆசிரியத் தளையான் வந்த வெண்டாழிசை)

3) வெண்டுறை :

மூன்றடிச் சிறுமையாய் ஏழடிப் பெருமையாய் இடை இடை நான்கடியானும், ஐந்தடியானும், ஆறடி யானும் வந்து பின்பிற் சில அடி சில சீர் குறைந்து வரு வது வெண்டுறையாகும். (சூத்திரத்தில் 'ஆன்றடிதாம்' என்று சிறப்பித்தவதனால், முன்பிற் சில அடி ஓரோசை யாயும், பின்பிற் சில அடி மற்றோரோசையாயும் வருவது ஒருசார் வேற்றொலி வெண்டுறை எனப்படும்.

உ-ம்: "தாளாள ரல்லாதார் தாம்பல ராயக்கால்
என்னா மென்னாம்
ஆளியைக் கண்டஞ்சி யானைதன் கோடிரண்டும்
பீலிபோற் சாய்த்துவிழும் பிளிற்றி யாங்கே'.

(இது மூன்றடியாய் ஈற்றடி இரண்டும் இரண்டு சீர் குறைந்து வந்த ஓரொலி வெண்டுறை.)

12) வெண் செந்துறை இன்னதெனக் காட்டி உதாரணம் தருக. [Int 1952, M A. 1955]

13) வெளி விருத்தத்தின் இலக்கணமும் உதாரணமும் தருக. [Int. 1951]

14) வெண்செந்துறை, வெண்டுறை, இவற்றின் வேறு பாடுகளை எடுத்துக் காட்டுக்கள் தந்து புலப்படுத்துக. [M.A. 1949]

(இக் கேள்விகளுக்குரிய விடைகளை, 11வது கேள்விக் குரிய விடைப் பகுதியில் கண்டு கொள்க.)

15) சிந்தடி வெண்பா ஒரு பொருண்மேல் மூன்றடுக்கி வருவதனை எப்பெயரால் வழங்குவர்? இது பற்றிக் காரிகை ஆசிரியர் கருத்து யாது? [Int. 1953]

'ஈரடி முக்கா லிசைகொள நடந்து
மூன்றுட னடுக்கித் தோன்றினுத் தாழிசை

என்று மயேச்சுரர் கூறியிருப்பதால், சிந்தியல் வெண்பா ஒரு பொருண்மேல் மூன்றடுக்கி வருவதும் வெள்ளொத்தாழிசை எனப்படும் என்று காரிகை ஆசிரியர் எழுதி உள்ளார் ஆனல் அவர் கருத்து, மூன்றடியாய் ஈற்றடி வெண்பாவேபோல முச்சீரடியாலிறுவது வெள் ளொத்தாழிசை என்பதாகும்.

உ-ம்: 'அன்னு யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
ஒன்ஞ ருடைபுறம்போல நலங்கவர்ந்து
துன்ஞன் துறந்து விடல்'
'ஏடி யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
கூடா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
நீடான் துறந்து விடல்'
'பாவா யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
மேவா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
காவான் துறந்து விடல்'.

(இவை, சிந்தியல் வெண்பா ஒரு பொருண்மேன் மூன்றடுக்கி வந்தமையான் வெள்ளொத்தாழிசையாகும்.)

## சூத்திரங்கள்

1) ஈரடி வெண்பாக் குறள்குறட் பாவிரண் டாயிடைக்கட்
சீரிய வான்றனிச் சொல்லடி மூய்ச்செப்ப
லோசைகுன்றா
தோரிரண் டாயு மொருவிகற் பாயும் வருவதுண்டேல்
நேரிசை யாகும் நெறிசுரி பூங்குழல் நேரிழையே
[யா. கா. 24]

2) ஒன்றும் பலவும் விகற்பொடு நான்கடி
யாய்த்தனிச்சொல்
இன்றி நடப்பினஃதின்னிசை துன்று மடிபலவாய்ச்
சென்று நிகழ்வ பஃறொடை யாஞ்சிறை வண்டினங்கள்
துன்றுங் கருமென் குழற்றுடி யேரிடைத்
தூமொழியே
[யா. கா. 25]

3) நேரிசை யின்னிசை போல நடந்தடி மூன்றின் வந்தால்
நேரிசை யின்னிசைச் சிந்திய லாகு நிகரில் வெள்ளைக்
கோரசைச் சீரு மொளிசேர் பிறப்புமொண் காசுமிற்ற
சீருடைச் சிந்தடி யேமுடி வாமென்று தேறுகவே.
[யா. கா. 26]

4) அந்தமில் பாத மளவிரண் டொத்து முடியின்
வெள்ளைச்
செந்துறை யாகுந் திருவே யதன் பெயர் சீர் பலவாய்
அந்தங் குறைநவுஞ் செந்துறைப்பாட்டி
னிழிபுமங்கேழ்
சந்தஞ் சிதைந்த குறளுங் குறளினத் தாழிசையே.
[யா. கா. 27]

5) மூன்றடியானு முடிந்தடி தோறு முடிவிடத்துத்
தான்றனிச் சொற்பெறுந் தண்டா விருத்தம் வெண்
டாழிசையே
மூன்றடி யாய்வெள்ளை போன்றிறு மூன்றிழி
பேழுயர்வாய்
ஆன்றடி தாஞ்சில அந்தங் குறைந்திறும்
வெண்டுறையே [யா. கா. 28]

மேற்கூறிய சூத்திரங்களில், முதல் சூத்திரத்தில் 'சீரியவான்றனிச் சொல்லடி மூப்' என்று கூறியவதனுல், முதற் குறள் பாவினோடு தனிச்சொல், இடை வேறு பட்டு விட்டிசைப்பின், ஒற்றுமைப்படாத உலோகங்களை ஒற்றுமைப்பட பற்ருசிட்டு விளக்கினுற்போல, முதற் குறட்பாவின் இறுதிக் கண் ஒன்றும், இரண்டும் அசை கூட்டி உச்சரிக்கப்பட்டு இரண்டு விகற்பத்தாலும் ஒரு விகற்பத்தாலும் வருவனவும் உள என்பதும், அவை ஒரு சார் ஆசிடை நேரிசை வெண்பா என்பதும் பெறப்படும்.

இரண்டாவது சூத்திரத்தில், 'சென்று நிகழ்வ' என்று கூறியது, செப்பலோசையிற் சிறிது, வழுவிவந்த பஃறொடை வெண்பாக்களை ஒருபுடையொப்புமை நோக்கி வெண்கலிப்பாற்படுத்து வழங்கினும் இழுக்கா தென்பது அறிவித்தற்காகும்.

மூன்ருவது சூத்திரத்தில், 'நிகரில்வெள்ளைக்கு' என்று கூறியவதனுல், குறள் வெண்பாவினை ஓரடி முக்கால் என்றும், சிந்தியல் வெண்பாவினை ஈரடி முக்கால் என்றும், நேரிசை வெண்பாவினை மூவடி முக்கால் என்றும், இன்னிசை வெண்பாவினை இன்னிசை மூவடி முக்கால் என்

றும், பலேருடை வெண்பாவினை பலவடிமுக்கால் என்றும், ஒரு சிலர் பெயரிட்டு வழங்குவர் எனக் கொள்ளவேண்டும். 'ஒளிசேர் பிறப்புமொண் காசும்' என்று சிறப்பித்தது காசு' பிறப்பு என்னும் வாய்பாட்டான் முற்றியலுகரம் ஈருகிய நேரீற்றியற்சீர் இறுதியாகிய முச்சீரடியானும் இறுவனவும் உள ஒருசார் வெண்பா என்பது அறிவித்தற்காகும்.

ஐந்தாவது சூத்திரத்தில், வெண்பாவிற்கு இனமாகிய தாழிசை, துறை, விருத்தங்கட்கு முறையாக இலக்கணம் சொல்லாது, தலை தடுமாற்றமாகச் சொல்லியது என்னையெனின், ஒருசார் வெண்டுறையின் ஈற்றடி ஒன்ருெரு சீர் குறைந்து வருதல் உளதென்பதும், வெள்ளொத் தாழிசையின் முதல் இரண்டடியும் நான்கு சீரான் வரும் என்பதும். சிந்தியல் வெண்பா ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வருவன எல்லாம் வெள்ளொத்தாழிசை என்று வழங்கப்படும் என்பதும், அறிவித்தற்காகும். இவ்வாறு கூறுதலுக்குக் காரணம் தலைதடுமாற்றந் தந்து புணர்ந்து உரைத்தல் என்னும் தந்திர உத்தியாகும்.]

### வேறு கேள்விகள்

16) பின்வரும் பாடல் இன்ன காரணத்தால் இன்ன பாவின் வகையைச் சேர்ந்தன என்று விளக்குக.

[M. A 1951]

வண்டார் பூங்கோதை வரிவளைக்கைத் திருநுதலாள் பண்டைய ளல்லள் படி' (இது சந்தம் சிதைந்து வந்த தாழிசைக்குறளாகும்.)

(விளக்கம் - 11-வது கேள்விக்குரிய விடையில் கண்டு கொள்க.

17 ) 1. 'அறிந்தானை யேத்தி......சிறந்தமை
யாராய்ந்து கொண்டு'

2. முல்லை முறுவலித்துக் காட்டின.........
...வரவுரைக்குங்கார்'

இவை எவ்வகைப் பாவிற்கு உதாரணம் என்பதைக் காரணத்துடன் விளக்குக. [Int. 1955]

1. நேரிசைச் சிந்தியல் வெண்பா.

2. இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

(இவற்றிற்குரிய இலக்கணங்களுக்கு - 10 - வது கேள்விக்குரிய விடையினைப் பார்க்கவும்.)

18) 1. 'சுரையாழ அம்மி மிதப்ப.........கானநாடன்
சுனை.'

2. ஆர்கலியுலகத்து......ஒழுக்க முடைமை.'

இவை இரண்டும் எவ்வகைப்பாக்கள் என்பதனை உணர்த்திக் காரணமும் தருக. [Int. 1954]

1. இன்னிசைச் சிந்தியல் வெண்பா

2. குறள்வெண் செந்துறை

இலக்கணத்தினை முறையே 10-வது 11-வது கேள்விகளுக்குரிய விடைகளில் கண்டுகொள்ளவும்.

19) 1. 'நண்ணுவார் வினை.........கற்றவரே.'

2. 'வைகலும் வைகல்......வைத்துணராதார்'.-இவையிரண்டும் எவ்வகைப் பாக்கள் என்பதனை உணர்த்திக் காரணமும் தருக. [Int. 1953]

1. குறட்டாழிசை (இலக்கணத்தினை 11-வது கேள்விக்குரிய விடையில் பார்க்கவும்)

2. இன்னிசை வெண்பா. இலக்கணத்தினை 8-வது கேள்விக்குரிய விடையில் பார்க்கவும்.)

20) **ஆசிரியப்பாவும் அதன் வகையும் பற்றிய இலக்கணத்தை விளக்கி வரைக.** [M. A. 1948]

நாற்சீரான் வரும் அளவடியதாகியும், இயற்சீர் பயின்றும், அயறசீர் விரவியும், தன்தளை தழுவியும், பிற தளை மயங்கியும், கருவிளங்கனி, கூவிளங்கனி என்னும் இரு சீரும் கலவாது அகவலோசை உடையதாய் மூன்று முதலிய பல அடிகளால் வருவது ஆசிரியப்பா அல்லது அகவற்பா எனப்படும்.

நேரிசை யாசிரியப்பா, இணைக்குறளாசிரியப்பா, நிலைமண்டில வாசிரியப்பா, அடிமறி மண்டில வாசிரியப்பா என ஆசிரியப்பா நான்கு வகைப்படும்.

1) நேரிசை யாசிரியப்பா:

ஈற்றயலடி முச்சீரான் வருவது.

"நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே".

2) **இணைக் குறளாசிரியப்பா:**

ஈற்றடியும் முதலடியும் ஒழிந்த இடையடிகள் இரண்டும் பலவும் குறளடியானும், சிந்தடியானும் வருவது.

நீரின் றண்மையுந் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும்

சார னுடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல்லாதே."

[இது முதலடியும் ஈற்றடியும் நாற்சீராய், இடையடி இரு சீரானும், முச்சீரானும் வந்த இணைக்குறளாசிரியப்பா]

3. நிலை மண்டில ஆசிரியப்பா :

எல்லா அடியும் தம்முள் அளவொத்து நாற்சீர் அடியாய் வரும்.

"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே".

[நிலைமண்டில ஆசிரியப்பாவிற்கு 'என்' என்னும் அசைச் சொல்லான் இறுவது சிறப்புடைத்து; மற்றொரு சார் ஒற்றினானும், உயிரினானும் ஈறாய் வரவும் பெறும்.]

4. அடிமறி மண்டில ஆசிரியப்பா :

எல்லா அடியும் அளவொத்து, எவ்வடியை முதல், நடு, இறுதியாக உச்சரிப்பினும், ஓசையும், பொருளும் பிழையாது வருவது.

"சூரல் பம்பிய சிறு கான் யாறே
சூரர மகளி ராரணங் கினரே
வாரலை யெனினே யானஞ் சுவலே
சார னாட நீவர லாறே".

[ஆசிரியப்பாவின் நான்கு வகைகளின் இலக்கணம் உணர்த்தும், 'கடையயற்' என்று தொடங்கும் சூத்திரத்தில் 'காமருசீர்' என்று சிறப்பித்தவதனல், ஆசிரியப்பா நான்கினிற்கும் 'ஏ' என்னும் அசைச் சொல்லான் இறுவது சிறப்புடைத்து. பிற எழுத்தும் ஈறாய் வரப்பெறுமாயினும் கொள்க.

21) நிலை மண்டில ஆசிரியப்பாவினை விளக்கி வரைக. [Int. 1954]

22) அடிமறி மண்டில ஆசிரியப்பா இன்னதென விளக்கி உதாரணம் தருக. [Int. 1952]

23) நிலை மண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா, இவற்றுள் வேறுபாடு என்ன? [Int. 1955] (இக்கேள்விகளுக்குரிய விடைகளை, 20-வது கேள்விக்குரிய விடைப் பகுதியில் கண்டு கொள்க)

24) ஆசிரியப்பாவின் பாவினங்களை விளக்குக. [Intr. 1950]

25) ஆசிரியத் தாழிசை—விளக்குக. [Intr. 1954]

1. ஆசிரியத்தாழிசை:

எனைத்துச் சீரானும் மூன்றடியாய்த் தம்முள் அளவொத்து வருவது.

['தருக்கியல் தாழிசை மூன்றடி யொப்பண' என்பதில் 'தருக்கியல் தாழிசை என்று சிறப்பித்தவதனல் ஆசிரியத்தாழிசைகள் ஒரு பொருண்மேன் மூன்றடுக்கி வருவன சிறப்புடையன என்பது பெறப்படும்.]

'வானுற நிமிர்ந்தனை வையக மளந்தனை
பான்மதி விடுத்தனை பல்லுயி ரோம்பினை
நீனிற வண்ணநின் னிரைகழ றொழுதனம்".
[தனியே வந்த ஆசிரியத் தாழிசை.]

2) ஆசிரியத்துறை :

எனைத்துச் சீரானும் நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து வருவனவும், நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து இடை மடக்காய் வருவனவும், நான்கடியாய் இடையிடை குறைந்து வருவனவும், நான்கடியாய் இடையிடை குறைந்து இடைமடக்காய் வருவனவும் ஆசிரியத் துறையாகும்.

உ-ம் :

1. கரைபொரு கான்யாற்றங் கல்லதர் எம்முள்ளி
வருதிராயின்
அரையிருள் யாமத் தடுபுலியே றும்மஞ்சி
யகன்று போக
நரையுரு மேறுநுங் கைவே லஞ்சு நும்மை
வரையர மங்கையர் வௌவுத லஞ்சுதும் வாரலையே.

[நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து வந்த ஆசிரியத் துறை.]

2 வண்டுளர் பூந்தார் வளங்கெழு செம்பூட் சேய்
வடிவே போலத்
தண்டளிர்ப்பூம் பிண்டித் தழையேந்தி மாவினவித்
தணந்தோன்–யாரே
தண்டளிர்ப்பூம் பிண்டித் தழையேந்தி வந்துநம்
பண்டைப் பதி வினவிப் பாங்கு படமொழிந்து
படர்ந் தோனன்றே.

[நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து இடை மடக்காய் வந்த ஆசிரியத் துறை.]

3. உதாரணம் வந்துழிக் கண்டு கொள்க.

4. இரங்கு குயின்முழவா வின்னிசையாழ் தேனு
அரங்கு மணிபொழிலா வாடும் போலு
மிள வேனில்
அரங்கு மணிபொழிலா வாடு மாயின்
மரங்கொன் மணந்தகன்றார் நெஞ்ச மென்செய்த
திளவேனில்.

[நான்கடியாய் இடையிடை குறைந்து இடைமடக்காய் வந்தது.]

3) **ஆசிரிய விருத்தம் :**

கழிநெடிலடி நான்காய்த் தம்முள் அளவொத்து வருவது.

["குறைவில் தொல்சீரகவல் விருத்தங் கழிநெடினான் கொத்திறுவது" என்பதில் 'குறைவில் தொல் சீர்' என்று சிறப்பித்தவதனால் எண் சீரின் மிக்க சீரான் வந்த அடியெல்லாஞ் சிறப்பில எனக் கொள்க.

உ-ம் :

விடஞ்சூழ் அரவி னிடைநுடங்க மின்வாள் வீசி
விரையார் வேங்
கடஞ்சூழ் நாடன் காளிங்கன் கதிர்வேல் பாடு மாதங்கி
வடஞ்சேர் கொங்கை மலைதாந்தாம் வடிக்கண் ணீல
மலர்தாந்தாம்
தடந்தோ ளிரண்டும் வேய்தாந்தா மென்னும் தன்மைத்
தண்ணுமையே.

[இது அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்]

## சூத்திரங்கள்

1. *கடையயற் பாதமுச் சீர்வரின் நேரிசை காமருசீர்*
*இடைபல குன்றி னிணைக்குற ளெல்லா வடியு*
*மொத்து*
*நடைபெறு மாயின் நிலைமண் டிலநடு வாநியந்தத்*
*தடைதரு பாதத் தகவ லடிமறி மண்டிலமே'*
*[யா. கா. 29]*

2. *தருக்கியல் தாழிசை மூன்றடி யொப்பன*
*நான்கடியாய்*
*எருத்தடி நைந்து மிடைமடக் காயு மிடையிடையே*
*சுருக்கடி யாயுந் துறையாங் குறைவிறுதல் சிரகவல்*
*விருத்தங் கழிநெடி லொன்கொத் திறுவது மெல்லியலே'*
*[யா. கா. 30]*

26) கலிப்பாவின் இலக்கணம்தந்து அதன் வகைகளையும் குறிப்பிடுக. [M. A. 1955]

துள்ளல் ஓசை உடையதாய், வெண்சீர்மிகப்பெற்று, மாச்சீரும் விளங்கனிச் சீரும் பெறாது, பிறசீர்களும் சிறுபான்மை கலந்து, கலித்தளையும் அயற்றளையும் தழுவி, தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச் சொல், சுரிதகம் என்னும் ஆறு உறுப்பினுள் ஏற்பன கொண்டு நாற்சீரடியால் வருவது கலிப்பா வாகும். அக்கலிப்பா, ஒத்தாழிசைக்கலிப்பா, வெண் கலிப்பா, கொச்சகக்கலிப்பாவுமென மூன்று வகைப்படும்.

27) ஒத்தாழிசைக் கலிப்பாவின் வகைகளை விளக்கிவரைக.

28) நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா, வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாக்களை விளக்கி வரைக. [Int. 1954]

29) நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா, அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா - வேறுபாடு தோன்ற இவற்றின் இலக்கணங்களை விளக்குக. [Int. 1953]

ஒத்தாழிசைக் கலிப்பா, வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா, அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா, நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா என மூவகைப்படும்.

1) வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா:
ஒரு தரவு, மூன்று தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறு உறுப்புக்களையும் ஒன்றன்பின் ஒன்றாகக் கொண்டு வரும்.

2) அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா:
மேற்சொல்லப்பட்ட தாழிசை முதலிய ஆறனுள் அராகம் ஒழிந்த ஐந்து உறுப்பையும் கொண்டுவரும்.

3) நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா:
தரவு முதலிய ஆறனுள் அராகம், அம்போதரங்கம் ஒழித்த நான்கு றுப்பையும் கொண்டு வரும்.

30) வெண் கலிப்பாவினை விளக்கி வரைக. [M A. 1948, 1949, Int. 1954]

31) கலிவெண்பா, பஃறொடை வெண்பா, வெண் கலிப்பா— இவற்றின் வேறுபாடுகளைப் புலப்படுத்துக [M. A. 1948]

வெண் கலிப்பா, வெண் கலிப்பாவும், கலி வெண்பாவும் என இருவகைப்படும்

1) வெண் கலிப்பா: கலித்தளை விரவி ஈற்றடி முச் சீரால் முடியும்.

2) கலி வெண்பா: வெண்டளை தழுவி ஈற்றடி முச் சீரால் முடியும்.

3) பஃறொடை வெண்பா: நான்கடியின் மிக்க பல அடிகளைப் பெற்றுவரும்.

32) கொச்சகக் கலிப்பாவின் வகைகளைக் கூறி இலக்கணம் தருக. [Int. 1954, 55]

33) வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா, சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா - இவற்றின் வேறுபாடு தோன்ற இவற்றிற்குரிய இலக்கணங்களைவிளக்குக. [In. 1953]

தரவு கொச்சகக் கலிப்பா, தரவிணைக் கொச்சகக் கலிப்பா, சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, என கொச்சகக் கலிப்பா ஐந்துவகைப் படும்.

1) தரவு கொச்சகக் கலிப்பா:
தரவு ஒன்று பெற்றுவருவது.

2) தரவிணைக் கொச்சகக் கலிப்பா:
இரண்டு தரவைக் கொண்டு வருவது.

3) சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா:
சில தாழிசைகளோடு பிற உறுப்புக்களையும் கொண்டு வரும்.

4) பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா:
பல தாழிசைகளோடு பிற உறுப்புக்களையம் கொண்டு வரும்.

5) மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா:

தாவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச் சொல், சுரிதகம், என்னும் ஆறு உறுப்பும், மிக்குங் குறைந்தும், பிறழ்ந்தும், உறழ்ந்தும் பலவாறு மயங்கி வரும்.

## கலிப்பாவின் இனம்.

34) கலிப்பா இனங்களின் இலக்கணத்தை எழுதி, ஏதேனும் ஒன்றிற்கு உதாரணம் தருக. [B. A. 1953]

35) கலி விருத்தத்தின் இலக்கணம் தருக. [M. A. 1949]

கலிப்பா இனம்:- 1) கலித்தாழிசை 2) கலித்துறை 3) கலிவிருத்தம்.

1) கலித்தாழிசை: இரண்டு முதலிய பல அடிகளால் ஈற்றடிமிக்கு ஏனையடி தம்முள் அளவொத்து நிற்பத் தனித்தேனும், ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி யேனும் வருவது கலித்தாழிசையாகும்.

'கொய்தினை காத்துங் குளவி யடுக்கத்தெம்
பொய்தற் சிறுகுடி வாரனீ யைய நலம்வேண்டின்'
'ஆய்தினை காத்து மருவி யடுக்கத்தெம்
மாசில் சிறுகுடி வாரனீ யைய நலம் வேண்டின்'
'மென்றினை காத்து மிகுபூங் கமழ் சோலைக்
குன்றச் சிறுகுடி வாரனீ யைய நலம் வேண்டின்'

(இவை இரண்டடியாய் ஈற்றடிமிக்கு ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வந்த கலித்தாழிசையாகும்.)

'பூண்ட பறை யறையப் பூத மருள
நீண்ட சடையா னாடுமே
நீண்ட சடையா னாடு மென்ப
மாண்ட சாயன் மலைமகள் காணவே காணவே'.

(இது ஈற்றடி மிக்கு இரண்டாம் அடி குறைந்து, முதலடியும் மூன்றாமடியும் ஒத்துவந்த கலித்தாழிசையாகும்.)

2) கலிவிருத்தம்:
நாற்சீரடி நான்கினைக் கொண்டு வருவது கலிவிருத்தமாகும்.

உ-ம்: 'வேய்தலை நீடிய வெள்ளி விலங்கலின்
ஆய்தலி னெண்சுட ராழியி னன்றமர்
வாய்தலி னின்றனர் வந்தென மன்னர்முன்
நீதலை சென்றுரை நீள்கடை காப்போய்'

3) கலித்துறை: ஐஞ்சீரடி நான்காய் வருவது கலித்துறையாகும்.

'யானுந் தோழியு மாயமு மாடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்
தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்
கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே!

36) **கட்டளைக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை— உதாரணம் கூறி விளக்குக.**

மேலே சொல்லப்பட்ட கலிப்பாவினும் கலித்துறையினும் வேறுபட்டு வரும் கலிப்பாவும் கலித்துறையும் உள்ளன. அவையாவன, 1. கட்டளைக் கலிப்பா. 2. கட்டளைக் கலித்துறை.

1) **கட்டளைக் கலிப்பா:**

இது முதற் கண் மாச்சீர்பெற்று நாற் சீரான் வருவது அரையடியாகவும், அஃது இரட்டி கொண்டது ஓரடி

யாகவும், அவ்வடி நான்கு கொண்டு வரும். அவை யடிக்கு எழுத்து முதலசை நேராயிற் பதினொன்றும் நிரையசை யாயிற் பன்னிரண்டுமாம்.

உ-ம் 'சொல்லி னீரிவ ராசைப் பட்டாரென்று
சொன்ன சொற்பொருள் வேறுகொண் டையையோ
புல்லுவாரெவ் விதத்தினு மென்றுளம்
பூரித் தேயிருந் தேன்மட மங்கைமீர்
செல்லு லாம்பொழிற் கூவ நகருறை
திருவிற் கோலரி னுமரு ளாமையால்
அல்ல தேது திகம்பர ரென்பொரு
ளாறையின் வன்கண்ண ராவரென் மட்டுமே.'

2. கட்டளைக் கலித்துறை:

இது முதற் சீர் நான்கும் வெண்டளை பிழையாமல் நிற்பக் கடையொரு சீரும் விளங்காயாகி வரும் ஐஞ் சீரடி நான்கு கொண்டுவரும். (அது விளங்காயாய் வருவதன்றிச் சிறு பான்மை வேறுபட்டும் வரும். ஓரடிக்கு எழுத்து முதலசை நேராயிற் பதினாறும் நிரையசையாயிற் பதினேழுமாம்.)

உ-ம்: 'சிலைமலி வாணுத லெங்கைய தாக மெனச் செழும்பூண்
மலைமலி மார்பி னுதைப்பத் தான்றலை மன்னர் தில்லை
உலைமலி வேற்படை யூரனிற் கள்வரில் லென்ன வுன்னிக்
கலைமலி காரிகை கண்முத்த மாலை கலுழ்ந்தனவே.

37) கலிப்பாவில் உறுப்பாக வரும் தாழிசைக்கும் கலிப்பாவின் பாவினமாக வரும் தாழிசைக்கும் உள்ள வேற்றுமையை விளக்குக- [Int. 1950]

உறுப்பாக வரும் தாழிசையாவது தாழ்ம்பட்ட இசையுடையதாய் அடிகளாலே, தரவின்றுந் தொகை குறைந்து கலிப்பாவின் இரண்டாம் உறுப்பாய் நிற்பதாகும். கலிப்பாவின் பாவினமாக வரும் தாழிசை என்பது, அடிவரையின்றி அளவினால் ஒத்தும் ஒவ்வாதும் வந்து ஈற்றடி மாத்திரம் நீண்டிசைப்பதாகும். அது கலித்தாழிசை எனப்படும். உறுப்பாக வரும் தாழிசையினை இடை நிலைப் பாட்டென்று (இடையிலே நிற்கும் பாட்டு) கூறுவர்.

38) விளக்கி வரைக: 1. தரவு 2. தாழிசை 3. தனிச்சொல் 4. சுரிதகம் 5. அம்போதரங்கம் 6. அராகம்

1) தரவு: மற்றை யுறுப்பின் பொருள்களைத் தொகுத்துத் தந்து கலிப்பாவின் முதலுறுப்பாய் நிற்பது. (தாவு—தருதலுடையது.) தரம்போன்று (தரம்—தலை) நிற்றல் பற்றித் தரவெனப்பட்டது என்று ஒரு சிலர் கூறுவர். எருத்தம் என்றும் இதனை வழங்குவர்.

2) தாழிசை: தாழ்ம்பட்ட இசையுடையதாய் அடிகளாலே தரவினின்றுந் தொகை குறைந்து கலிப்பாவின் இரண்டாம் உறுப்பாய் நிற்பது இதற்கு இடை நிலைப் பாட்டென்றும் பெயர். தரவு தாழிசைகளிலே பெரும்பாலும் புளி மாங்காய்ச் சீரும், கருவிளங் காய்ச் சீரும் வருவனவாகும். இரண்டினுக்கும் அடி அளவடியாகும்.

3) **தனிச் சொல்:** தனியே சொல்லப்படும் ஒரு சீராய்ப் பொருள் நிரம்பி விட்டிசைத்துப் பெரும்பாலும் சுரிதகத்தின் முன்னே நிற்பது. விட்டிசை, கூன், தனிநிலை என்பன இதற்குரிய மறு பெயர்களாகும்.

4) **சுரிதகம்:** தனிச் சொற்குப் பின்னே, அகவற்பா, வெண்பா என்னும் இரண்டனுள் ஒன்றாய் வந்து. கலிப்பாவின் இறுதியுறுப்பாய் நின்று முடிப்பது. சுரிதகம் என்றால் நலிந்து உச்சரிக்கப்படுதல் என்று பொருள்படும். அடக்கியல், போக்கியல், வாரம், வைப்பு, என்பன இதற்குரிய வேறு பெயர்களாகும்.

5) **அம்போதரங்கம்:** அம்போதரங்கமாவது உயர்ந்தோங்கிப் பெரு வடிவமாய் எழுந்து வர வரச் சுருங்கிக் கரையடைந்தொடுங்கும் இயல்புடைய நீர்த்திரை போன்று முன்னர் நாற் சீரடியாய் உயர்ந்தோங்கிப் பின்னர் முச் சீரடியாய் அதனிற் சுருங்கி அதன் பின்னர் இரு சீரடியாய் அதனினும் சுருங்கிமுடிவது. (அம்போ — நீரினது; தரங்கம் — திரை) அசையடி, சொற் சீரடி, எண், பிரிந் திசைக் குறள், என்பன இதனது வேறு பெயர்களாகும்.

6) **அராகம்:** குறிலிணையாலாய நிரையசைச் சீர்களேயே பெரும் பாலும் பெற்று மாத்திரை நீளுதலு மிடையிலே துணிதலுமின்றிக் கடுகிச் செல்லும் அடிகளால் வருவது அராகமாகும். (அராகம்—கடுகிச் செல்வது) வண்ணகம், முடுகியல், அடுக்கியல் என்பன இதற்குரிய வேறு பெயர்களாகும்.

வருணித்துப் புகழ்வது வண்ணகமாகும். முடுகிச் செல்லும் இயல்புடையது முடுகியலாகும். அடுக்கியல் சீர்கள் செறிந்து நிற்குமாறு அடுக்கப் படும் இயல்புடையது. இதற்கு அடி அளவடி முதலியன. அடிகளுக்குச் சுருக்கம் நான்கென்றும், பெருக்கம் எட்டென்றும் கூறுவர்

39) வஞ்சிப்பாவின் இலக்கணத்தை அது கூறப்பட்டுள்ள இடஞ்சுட்டி எழுதுக.

அல்லது

வஞ்சிப்பாவின் இலக்கணம் எழுதி உதாரணம் தருக [Int. 1950]

வஞ்சிப்பாவிற்குரிய இலக்கணம் உறுப்பியலில் 14-வது சூத்திரமாகிய 'வெள்ளைக் கிரண்டடி' என்னும் காரிகையினும், செய்யுளியலின் முதற் சூத்திரமாகிய 'வெண்பாவகவல்' என்னும் காரிகையினுள்ளும் கூறப் பெற்றுள்ளது.

வஞ்சிப்பாவிற்கு மூன்றடியே சிறுமை என்பதும், மயேச்சுரர் முதலாகிய ஒருசார் ஆசிரியர் வஞ்சிப்பா இரண்டடியானும் வரப்பெறும் என்றார் என்பதும், உறுப் பியலில் கூறப்பெற்றன. செய்யுளியலின் முதற் சூத்திரம், வஞ்சிப்பா இருசீரடியானும், முச்சீரடியானும் வரப் பெறும் என்றும், வஞ்சிப்பா தூங்கலோசையால் வரும் என்றும் கூறுகின்றது.

இருசீரடியானும், தூங்கலோசையானும் வருவது குறளடி வஞ்சிப்பா ஆகும். முச்சீரடியானும் தூங்க லோசையானும் வருவது சிந்தடி வஞ்சிப்பா ஆகும்.

குறளடி வஞ்சிப்பா:

"சுறமறிவன துறையெல்லாம்
இறவீன்பன வில்லெல்லாம்
மீன்றிரிவன கிடங்கெல்லாம்
தேன்மூழ்வன பொழிலெல்லாம்
எனவாங்கு,
தண்பணை தழீஇய விருக்கை
மண்கெழு நெடுமதின் மன்னணரே"

சிந்தடி வஞ்சிப்பா:

"தொன்னலத்தின் புலம்பலைப்பத் தொடித்தோண்மேல்
பன்னலத்த கலந்தொலையப் பரிவெய்தி
என்னலத்தகை யிதுவென்னென வெழில்காட்டிச்
சொன்னலத்தகைப் பொருள்கருத்தி னிற்சிறந்தாங்
கெனப் பெரிதும்,
கலங்கஞ ரெய்தி விடுப்பவும்
சிலம்பிடைச் செலவுஞ் சேணிவந் தறறே"

40) வஞ்சிப்பாவின் இனங்களுக்கு இலக்கணம் எழுதி அவற்றுள் ஒன்றனுக்கு உதாரணம் தருக. (B. A. 1951)

அல்லது

வஞ்சிப்பாவின் இனங்களை எழுதி அவற்றின் இயல்புகளையும் தெரிவிக்க (Int. 1953)

வஞ்சிப்பாவின் இனம் மூன்று வகைப்படும். அவை யாவன:-

1. வஞ்சித்தாழிசை:

இரு சீரடி நான்காய் மூன்று செய்யுள் ஒரு பொருண்மேல் அடுக்கி வருவன வஞ்சித்தாழிசையாம்.

['குறளடி நான்கின மூன்றொரு தாழிசை கோதில்' என்பதில் 'கோதில்' என்று மிகுத்துச் சொல்லிய வதனால் அவை ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி அல்லது வாரா எனக் கொள்க].

உ-ம்,
"மடப்பிடியை மதவேழம்
தடக்கையான் வெயின் மறைக்கும்
இடைச்சுர மிறந்தார்க்கே
நடக்குமென் மனனே காண்."
"பேடையை யிரும் போத்துத்
தோகையான் வெயின் மறைக்கும்
காடக மிறந் தார்க்கே
ஓடுமென் மனனே காண்."
"இரும்பிடியை யிகல் வேழம்
பெருங்கையான் வெயின் மறைக்கும்
அருஞ்சுர மிறந்தார்க்கே
விரும்புமென் மனனே காண்".

2. **வஞ்சித் துறை.**

இருசீரடி நான்காய் ஒரு பொருள் மேல் ஒன்றாய் வருவது வஞ்சித்துறையாகும்.

"மைசிறந்தன மணிவரை
கைசிறந்தன காந்தளும்
பொய்சிறந்தனர் காதலர்
மெய்சிறந்திலர் விளங்கிழாய்."

3. **வஞ்சி விருத்தம் :**

முச்சீரடி நான்காய் வருவது வஞ்சி விருத்தம்.

"சோலை யார்ந்த சுரத்திடைக்
காலை யார்கழ லார்ப்பவும்
மாலை மார்பன் வருமாயின்
நீல வுண்க ணிவள் வாழுமே."

[குறிப்பு: குறளடி வஞ்சிப்பாவும், சிந்தடி வஞ்சிப் பாவும் தனிச்சொற் பெற்று ஆசிரியச் சுரிதகத்தாலிறும். 'மறைதலில் வாரம்' என சூத்திரத்தில் சிறப்பிக்கப்பட்ட தால் வஞ்சிப்பா ஆசிரியச் சுரிதகத்தா லிறுவதல்லது வெள்ளைச் சுரிதகத்தா லிறப்பெறுது.]

41) வஞ்சித் தாழிசை - இலக்கணம் தந்து உதாரணம் தருக. (M. A. 1949)

[மேற் கேள்விக்குரிய விடையில் முதல் பகுதியைப் பார்க்கவும்]

42) வஞ்சி விருத்தத்தின் இலக்கணம் தந்து உதாரணம் காட்டுக. (Int. 1951)

[மேற் கேள்விக்குரிய விடையில் மூன்ருவது பிரிவைப் பார்க்கவும்.]

சூத்திரம்.

குறளடி நான்கின மூன்ெருரு தாழிசை கோதில்வஞ்சித்
துறையொரு வாது தனிவரு மாய்விடிற் சிறந்தடி நான்
கறைதரு காலே யமுதே விருத்தந் தனிச்சொல்வந்து
மறைதலில் வாரத்தி ஞலிறும் வஞ்சிவஞ் சிக்கொடியே.

[யா. காரிகை. 35]

43) மருட்பாவின் இலக்கணம் எழுதி உதாரணம் ஒன்று தருக. (Int. 1950)

அல்லது

மருட்பா எவ்வெப் பொருள் மேல் வரற் பாலதாகும்? (Int. 1951)

அல்லது

மருட்பாவின் வகைகளைத் தெளிவுபடப் புலப்படுத்துக. (Int. 1953)

மருட்பா, புறநிலை வாழ்த்து மருட்பா, கைக்கிளை மருட்பா, வாயுறை வாழ்த்து மருட்பா, செவியறிவுறூஉ மருட்பா, என நான்கு வகைப்படும்.

புற நிலை வாழ்த்து, கைக்கிளை, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ என்னும் நான்கு பொருண் மேலும் வெண்பா முதலாக ஆசிரியம் ஈறாக வருமெனின் அது மருட்பாவாகும்.

**விளக்கம் :**

**1. புறநிலை வாழ்த்து.**

வழிபடும் தெய்வம் நின் புறங்காப்பக் குற்றமற்ற
செல்வம் பெற்று,
வழி வழி சிறந்து வாழ்க என வாழ்த்துதல் புறநிலை
வாழ்த்தாகும்.

உ-ம்:

'தென்ற லிடை போழ்ந்து தேனார் நறுமுல்லை
முன்றின் முகைவிரியு முத்தநீர்த் தன்கோளூர்க்
குன்றமர்ந்த கொல்லேற்றா னிற்காப்ப என்றுந்
தீரா நண்பிற் றேவர்
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே'.

[இது புறநிலை வாழ்த்து மருட்பாவாகும்]

**2. கைக்கிளை:**

காட்சி முதலாகக் கலவியின் ஒரு தலை வேட்கையிற் புலம்புதல் கைக்கிளையாகும்

“ திருநுதல் வேர்வரும்புந் தேங்கோதை வாடும்
இருநிலஞ் சேவடியுந் தோயும்—அரிபரந்த
போகித ழுண்கணு மிமைக்கும்
ஆகு மற்றிவ ளகலிடத் தணங்கே. ” (உ-ம்)

[இது துணிதலைக் கூறும் ஒரு தலைக்காமம் ஆதலிற் கைக்கிளை மருட்பாவாகும்.]

3. **வாயுறை வாழ்த்து:**

வேம்பும் கடுவும் போல வெஞ்சொல் தாங்குதல் இன்றி வழிநனி

பயக்கும் என்று, மெய்ப்பொருள் கூறிப் பாதுகாத்தல் வாயுறை வாழ்த்தாகும்.

4. செவியறிவுறூஉ

'உயர்ந்தோர்கண் அவிந்தொழுகுதல் கடன்' போன்ற அறிவுரைகளை அரசர் போன்றவர்க்கு அஞ்சாது இடித்துரைத்தல் (அறிவுறுத்தல்) செவியறிவுறூஉ வாகும்.

44. திருநுதல் வேர் வரும்புந் தேங் கோதை வாடும்

..........................................................

..........................................................

ஆகு மற்றிவ ளகலிடத் தணங்கே.'—இப்பாடல் இன்ன காரணத்தால் இன்ன பாவின் வகையைச் சேர்ந்தது என்று விளக்குக. (M. A. 1951.)

இது கைக்கிளை மருட்பாவாகும்.'

[சூத்திரத்தில் ' என்றிப் பொருண்மிசை ' என்று பிரித்துச் சொல்லியதால், இந்நான்கு பொருண்மேலுமன்றி மருட்பா வரப்பெறாதெனக் கொள்ளப்பெறும். 'பண்பார் புறநிலை' என்றும், 'ஒன்பாச் செவியறிவு' என்றும் சிறப்பித்த வதனால், புறநிலை வாழ்த்தும், வாயுறை வாழ்த்தும், செவியறிவுறூஉவும் இவ்வாறன்றி, வெண்பாவேயாயும், ஆசிரியமேயாயும் வரப்பெறும்; ஆனால் கலியும், வஞ்சியுமாய் வரப்பெறா என்பன பெறப்படும்.

மேலும், 'பாங்குடைக் கைக்கிளை' என்று கூறியவதனால், கைக்கிளை எல்லாப் பாவாலும் வரப்பெறும் என்பதும், கைக்கிளை வெண்பா முதலாக ஆசிரியம் ஈருக வரும் வழி ஆசிரிய அடி இரண்டேயாய், அவற்றுள் ஈற்றயலடி முச்சீராய் வரும் என்பதும், வெண்பா அடியும், ஆசிரிய அடியும் ஒத்து வருவன சமனிலை மருட்பா என்றும், ஒவ்வாதன வியனிலை மருட்பா என்றும், வழங்கப்படும் என்பதும் பெறப்படும். வேற்று வண்ணம் விரவாது வெள்ளை வண்ணம் எல்லா வண்ணத்துள்ளுஞ் சிறப்புடையதாய் மங்கல மரபிற்ரும் என்பது குறித்தும், அதுபோன்றே வேற்றுத் தளையும், அடியும், சீரும், விரவாமையால் எல்லாப் பாவினுள்ளும் வெண்பா சிறப்புடைத்தென்று முன் வைக்கப்பட்டதென்பது அறிவித்ததற்கும், ஆசிரியர் வெண்பாவினை 'ஊனமில்லா வெண்பா' எனச் சிறப்பித்துள்ளார்.]

## சூத்திரம்.

பண்பார் புறநிலை பாங்குடைக் கைக்கிளை வாயுறைவாழ்த்
தொண்பாச் செவியறி வென்றிப் பொருண்மிசை
யூனமில்லா
வெண்பா முதல்வந் தகவல்பின் ஞக விளையுமென்ருல்
வண்பான் மொழிமடவாய் மருட்பாவெனும் வையகமே.
[யா. காரிகை. 36]

# 3. ஒழிபியல்

## 1. எழுத்துப் புறநடை

1) அலகு காரியம் பெறாத எழுத்துக்கள் யாவை?
[Int. 1954] அல்லது
சீருந் தளையுஞ் சிதையின் அலகு பெறாத எழுத்தெவை? [Int. 1951] அல்லது
அலகு பெறாதும் மாத்திரையில் குறைந்தும் வரும் எழுத்துக்களைப்பற்றி ஒரு குறிப்பு வரைக.
[M. A. 1955] அல்லது
குற்றியலிகரம், குற்றியலுகரம் ஆகியவை அலகு பெறாததற்கு உதாரணம் தருக. [B. A. 1952]

### 1. அலகுபெறாத எழுத்துக்கள்

இச் சீரும் இத்தளையும் பெற்று நிற்கும் என்னும் விதி அமைந்து வரும் வெண்பா முதலியவற்றிலே, அச்சீராவது தளையாவது சிதையுமாயின் (வழுவுதல்) குற்றியலிகரமும் குற்றியலுகரமும், அளபெடையுயிரும் அலகு பெறாது வாளா நிற்கும். (அலகு-எழுத்தின் மாத்திரையை அளவை செய்து அசைகளை வரையறுத்தல்) சூத்திரத்தில் 'சிதையின்' எனக்கூறியதால், சிதையா வழியெல்லாம், ஒலித்தல் தொழில் உடையனவாய் அலகு பெறும் என்பதும், சிதைவுழி எல்லாம் குற்றியலிகரவுகரங்கள் ஒலித்தல் தொழில் இன்றி ஒற்றே போன்று நிற்கும் என்பதும், அளபெடையுயிர் நெடிலின் தன்மையே தன் தன்மையாய் நிற்கும் என்பதும், பெறப்படும்.

## 1. குற்றியலிகரம்

உ-ம்: 1. 'ஆதி முதலுணர்ந்தியா மன்புசெயப் பெற்றவா
ஓஒ பெரிது மரிதே யெளிதேயோ
வேதந் துறைசெய்தான் மெய்துணியான்
கைதுணியான்
பேதுற்றும் வெஃகேம் பிற'.

(இவ்வெண்பாவில், 'முதலுணர்ந்தியாம்' என்பது குற்றியலிகரம் நீக்கி யலகிட்டுக் கருவிளங்காய் என்னும் வாய்பாட்டு வெண்சீராகக் கொள்ளப்படும். இது குற்றியலிகரம் சீர் சிதைவுழி அலகு பெருமைக்கு உதாரணமாகும்.)

2. 'குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச் சொற் கேளா தவர்.'

(இதில், குழலினி, தியாழினி என்பன குற்றியலிகரம் நீக்கிக் கருவிளம் கூவிளம் என்னும் சீர்களாக அலகிடப் படும். அவ்விகரமும் அலகிடப்படுமாயின் அவை கருவிளம் கருவிளம் என்னும் சீர்களாகும் ஆகவே நிரையொன்றாசிரியத்தளை வந்து விரவும். வெண்பாவுள்ளே பிறதளை விரவா. இப்பாடல் குற்றியலிகரம் தளை சிதைவுழி அலகு பெருமைக்கு உதாரணமாகும்.

## 2. குற்றியலுகரம்

உ-ம்: கொன்றுகோடுநீடு குருதிபாயவும்
சென்றுகோடுநீடு செழுமலைபொருவன
வென்றுகோடுநீடு விறல்வேழம்
என்றுமூடுநீடு பிடியுளபோலும்

அதனால்,

இண்டிடை யிரவிவ ணசை இவரின்
வண்டுண் கோதை யுயிர்வாழாளே'

இக்குறளடி வஞ்சிப்பாவில் அடிகளின் முதல் நின்ற 'கொன்றுகோடு நீடு' முதலிய நான்கு சீர்களும் குற்றியலு கரங்கள் நீக்கி அலகிட்டுத் தேமாங்காய் வாய்பாட்டு வெண் சீர்களாகக் கொள்ளப்படும். உகரங்களும் அலகிடப்படுமா யின் ஆறசைச் சீர்களாய் விதிகடந்து வேறுபடும். இறுதிக் குற்றியலுகரங்களை மாத்திரம் நீக்கித் தேமாந் தண்ணிழ லாய்க்கொள்ளலும் அமையும். இது குற்றியலுகரம் சீர் சிதைவுழி அலகு பெறுமைக்கு உதாரணம்.)

### 3. அளபெடையுயிர்

விளி, பண்டமாற்று, நாவல்கூற்று, புலம்பல் முதலிய வற்றில் வரும் இயற்கை அளபெடை உயிர், சீராவது தளையாவது சிதை வுழி அலகு பெறாது நிற்கும். ஆனால் செயற்கை அளபெடை அலகு பெற்றே நிற்கும். (இயற்கை அளபெடை என்பது சொல்லொடும் தோன்றி வழக்கில் வந்து செய்யுளிடத்து வருவதாகும். செயற்கை அள பெடையாவது செய்யுளிலே சீர் தளை இயையாது முட்டுற் றுழி அசை வேண்டிச் செய்து கொள்ளப்படுவதாகும்.)

உ-ம்: களிச்சாத்தாஅ வென்றியான் கட்காண நின்று
விளித்தாலும் வாரான் விரைந்து'

(இதில் விளிக்கண் வந்த 'களிச்சாத்தாஅ' என்பது அளபெடை அகரம் நீக்கி அலகிடப்பட்டுப் புளிமாங்காய் வாய்பாட்டு வெண் சீராகக் கொள்ளப்படும். அகரமும் அலகிடப்படுமாயின் புளிமாந்தண்பூ வாய்பாட்டு நால

சைச் சீராகும். வெண்பாவிலே நாலசைச் சீர் விரவுத லில்லை. இது சீர் சிதைவுழி அலகு பெறுமைக்கு உதாரண மாகும்.

2. *மாத்திரையில் குறைந்து வரும் எழுத்துக்கள்*

### 1. ஐகாரக் குறுக்கம்

சீர் சிதைவுழி நின்ற ஐகாரம் குறுகிய ஐகாரமாயின் அது குற்றெழுத்தே போன்று ஒரு மாத்திரையாக அல கிடப்படும் தன்மையுடையதாகும். [ஐகாரக் குறுக்கத் திற்கு மாத்திரை ஒன்றறையாயினும், சீர் சிதைவுழி மெலிதாக உச்சரித்துக் குறில் போலவும், சிதையாவழி வலிதாக உச்சரித்து நெடில் போலவும் கொள்ளப்படும்.]

உ-ம்:

'வாதவர்கோன் பின்னையென்றான் வத்தவர்கோ னாளை
யென்றான்
யாதவர்கோன் யாதொன்று மில்லையென்றான்—ஆதலால்
வாதவர்கோன் பின்னையினும் வத்தவர்கோ னாளையினும்
யாதவர்கோன் சொல்லே யினிது'.

[இதில், 'பின்னை யென்றான்' 'நாளையென்றான்', 'இல்லையென்றான்', 'பின்னையினும்', 'நாளையினும்' என் பவற்றில் ஐகாரங்கள் குறில் இயல்பாகக் கொள்ளப்படும். நெடிலாகக் கொள்ளப்படின் பூச்சீர் கனிச்சீர்களுக்கு இட னாய் வெண்பா விதியைச் சிதைக்கும்.]

### 2. அளபெடையொற்று.

சிதைவு வந்துழிச் சீரையாவது தளையையாவது நிமைக்கும்படி வந்து ஒற்றளபெடை யொற்றுத் தோன்று

மாயின், அது குறில் போன்று ஒரு மாத்திரை ஒலித்து நேரசையாகும். அளபெடை யொற்று ஓரலகு ஆகுங்கால் அயற் குறிலோடு இணைந்து நிரையாகாதோ எனின், ஊன்றி முறுக்கி உச்சரிக்கப்படுதலால் ஒரு மாத்திரை ஒலித்தலன்றி அயற் குறிலோடு இசையால் அணைதல் இன்மையின் ஆகாது என்பதாம். விட்டிசை பெறுதாகவும் முன்னின்ற குறிலும் இதனிசை வேறுபட்டால் தனி நின்று நேரசையாகும்.

உ-ம்: இலங்ங்கு வெண்பிறைசூ டீசனடி யார்க்குக்
கலங்ங்கு நெஞ்சமிலை காண்'

(இதில் "இலங்ங்கு', 'கலங்ங்கு' என்பன அளபெடை யொற்றுக்களை நேரசையாக்கிப் புளி மாங்காய் வாய்பாட்டு வெண்சீராகக் கொள்ளப்படும். இது தளை நிலையாதற்குத் தோன்றிய ஒற்றளபெடைக்கு உதாரணம்.)

## 3. ஒற்றெழுத்து

ஒற்றெழுத்தும் ஆய்தவெழுத்தும் தாமாக அலகு பெறுவது அளபெடையின் மாத்திரமே. தனிக் குறிற் பின் நேரசையினிற்பினும் தமக்கென வேறு மாத்திரை பெறுவ தில்லை. அளபெடை போல ஊன்றி முறுக்கி உச்சரிக்கப் படாமையால் ஈரொற்றாய் நிற்பவையும் ஓரொற்றுப் போலவே கொள்ளப்படும். வெண்பா, கட்டளைக் கலித் துறை, விருத்தம், கட்டளைக் கலிப்பா முதலியவற்றில் சீர் சிதை வுழி இரு குறிற்கு நடு நின்ற ஒற்றெழுத்து அவ்விரு குறிலும் இணைந்து நிரையசையாதல் வேண்டி நீக்கப் படுதலும் உண்டு. நீக்கப்படுதலன்றி இசை கெடும்வழி ஒற்று வருவித்துச் சேர்க்கப்படுதலும் உண்டு.

## 2. அசைகட்குப் நறநடை

### 1. தனிக்குறில் அசை

2. *தனிக்குறில் எவ்வாறு முதற்கண் நேரசையாம்? விளக்குக.* [Int. 1952.]

விட்டிசைத்தாலன்றிச் சீரின் முதற்கண் நின்ற குற்றெழுத்து நேரசையென்று கொள்ளப்படுவதில்லை. அதாவது தனிக்குற்றெழுத்து விட்டிசைக்குமாயின் சீர் முதற் கண்ணும் நேரசையாகும். மேலும் தொடரிசைப் பட்டுச் சொற்கு உறுப்பாய் நிற்கும் தனிக் குற்றெழுத்துச் சீர் இடைகடைகளில் தன் முன் நின்ற அசையின் இசை வலியால் இழுப்புண்டு இசை கண்ணழிந்து நேரசையாம் என்பதும் பெறப்படும். [இங்கு, கண்ணழிதல் என்பது பொருத்துவிடலாகும்; விட்டிசைத்தல் என்பது மற்றை எழுத்தோடு தொடராது பிளந்து இசைத்தலாகும்; விடுதல்—பிளவாதல். தனிக்குறில் என்பது ஒற்றொடு சேராது நிற்கும் குற்றெழுத்தாகும்.] சிறப்பு எழுத்தாய் நிற்கும் குற்றெழுத்தும், தற்பொருட்டாய் நிற்கும் குற்றெழுத்துமே, பின்னுயிர் வரும் வழி விட்டிசை பெறும். உறுப்பெழுத்தாய் நிற்கும் குற்றெழுத்து இயற்கைப் பொருத்துடைமையால் விட்டிசை ஆவதில்லை. சிறப்பு எழுத்து என்பது தனி நின்று பொருள் பயப்பதாகும். உறுப்பெழுத்தாவது இரண்டு முதலியனவாய்த் தொடர்ந்து நின்று பொருள் பயப்பது. குறிப்பு, தற்சுட்டு, ஏவல், சுட்டு, வினா என்னும் பொருள்கள் ஐந்திலும் விட்டிசை வரும்.

உ-ம். 'அ அவனும் இ இவனும் உ உவனுங் கூடியக்கால் எ எவனை வெல்லாரிகல்' (இதில் சுட்டுப் பொருளில் வந்த அ இ உ என்னும் குற்றெழுத்துக்களும், வினாப் பொருளில் வந்த எ என்னும் குற்றெழுத்தும் விட்டிசைத்து நிற்றலால் சீரின் முதற் கண் நேரசையாயின.

## 2. அளபெடையசை

1) சீராவது நனையாவது சிதைவுழித் தனி நெடிலளபெடை (நெட்டளபு) தோன்றுமாயின் அது நேரசையோடு பின்னும் ஒரு நேரசையாகும்.

2) குற்றெழுத்து நெடிலளபெடையோடு இயைந்து அதற்கு முன் நிற்குமாயின் அவ்வளபெடை நிரை நேர் என இரண்டசைகளாகும். இதனையே ஆசிரியர் 'குறில் இட்டத்தினாற் சேரின் நிரையொடு நேரசையாம்' என்று கூறுகின்றார் இட்டத்தினாற் சேர்தல் என்பது பிரிவின்றி இயைதலாகும். இட்டத்தினாலெனவே சேர்தற் கிசையுமிடம் முன் என்பது பெற்றாம். [இட்டம்-விருப்பு. நிரை நேர்-புளிமா.)

உ-ம்: 'ஏஎர் சிதைய வழாஅ லெலா அநின்
சேயரி சிந்தின கண்!

[இதில் 'ஏஎர்' என்பது, தனி நெடிலளபெடை நேர் நேர் எனக் கொள்ளப்படுதற்கு உதாரணம். 'அழாஅல்' என்பது, குறில் நெடிலளபெடை நிரை நேர் எனக் கொள்ளப்படுதற்கு உதாரணமாகும். இவை யிரண்டும் சீர்

நிலையின் பொருட்டுத் தோன்றியன. 'எலா அநின்'. என்பது தளை நிலை பெறுதற் பொருட்டுத் தோன்றியது. 'எலா அநின்'—புளிமாங்காய்.]

[தளை சிதைவுழி மாத்திரை கூடி மூன்றசையாதலும் உண்டு.]

3. 'நிரையொடு நேரசையாம் இட்டத்திற் குறில் சேரின்'— இதன் பொருளை உதாரணத்துடன் விளக்குக. (M. A. 1952)

இதற்குரிய விடையினை, 'அளபெடையசை' என்ற தலைப்பில் கூறப்பட்டிருப்பவற்றில் இரண்டாவது பிரிவில் காணவும்.

### 3. சீர்க்கும் தளைக்கும் புறநடை.

4. சீர்க்கும் தளைக்கும் புறநடையாய் வருவனவற்றைத் தெரிவிக்க [Int. 1953]

5. கலிப்பாவிலும் வெண்பாவிலும் முறையே வருதற்குரிய சீர்களிவை வரப்பெறாத சீர்களிவை என்பதை வரையறை செய்க. [M A. 1949]

6. எவ்வெப் பாக்களில் எவ்வெத் தளைகள் வரப்பெறா?

[B. A. 1953]

1) சீர்:

கலியடி

தேமா புளிமா என்னும் வாய்பாட்டு அகவற்சீர்கள் இரண்டும் கலித்தளை அமைந்து துள்ளல் இசைபெற இயற்றப்படும் கலியடிகளுள்ளே புகுவன ஆகா. எனவே கருவிளம் கூவிளம் என்னும் வாய்பாட்டுச் சீர்கள் சிறுபான்மை புகும் என்பது போதரும்.

## கலிப்பா

இடையில் விளமும் இறுதியில் கனியும் வந்தாகின்ற சீர்களாகிய கருவிளங்கனி, கூவிளங்கனி என்னும் வாய்பாட்டு வஞ்சிச் சீர்கள் இரண்டும் கலிப்பாவிலே சென்று விரவி நிற்பன ஆகா. எனவே மற்றைத்தேமாங்கனி, புளிமாங்கனி என்னும் வஞ்சிச் சீர்களும், தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் அகவற் சீர்களும் சிறுபான்மை கலிப்பாவிலே வந்து விரவும் என்பது பெறப்படும்.

## அகவற்பா

கருவிளங்கனி, கூவிளங்கனி என்னும் சீர்கள் இரண்டும் அகவற்பாவிலும் சென்று விரவி நிற்பன ஆகா. எனவே மற்றைத் தேமாங்கனி, புளிமாங்கனி என்னும் வஞ்சிச்சீர்களும் வெண்சீர்களும் அகவற்பாவிலே சிறுபான்மை வந்து விரவும் என்பது பெறப்படும்.

## வெண்பா

வெண்பாவிலே கனிச்சீர் எனப்படும் வஞ்சிச்சீர் புகுந்து விரவுமாயின், செப்பலிசையாகிய அதன் இலக்கணம் சிதைந்து வேறாய்விடும். எனவே வெண்சீரோடு விரவியும், தனித்தும் அகவற்சீர் வெண்பாவிலே வரும் என்பது பெறப்படும்.

மேலே கூறப்படாத பாவாகிய வஞ்சிப்பாவும், பாவினங்களாகிய துறை தாழிசை விருத்தங்களுமாகிய எல்லாம் தத்தம் சீர்களோடு பிற சீர்களும் வந்து மயங்கி நிற்கப்பெறும்.

2) தளை:

வெண்பாவிலே அயற்றளையாகிய இருவகையாசிரியத் தளையும், கலித்தளையும், விரவித் தழுவி நிற்பன ஆகா. வெண்பாவொழிந்த பாக்களும் எல்லாப் பாவினங்களும் தத்தம் தளைகளோடு பிற தளைகளும் வந்து மயங்கப்பெறும். எனவே ஆசிரியப்பாவிலும், கலிப்பாவிலும், வஞ்சிப் பாவிலும், பாவினங்களிலும் பிற தளைகள் விரவும் என்பது பெறப்படும்.

உ-ம்: 'மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்
விளைவறா வியன்கழனி'

('இவ்வடிகளிலே வரும் 'கடற்காவிரி' **என்பது** வஞ்சிச்சீர்; 'விளைவறா' என்பது அகவற்சீர். மற்றைய வெண் சீர். கலித்தளையும், வெண்டளையும், ஆசிரியத்தளையும் விரவின)

## 4. அடிகட்குப் புறநடை.

7) *அடி மயங்கி வரும் முறைகளை உணர்த்துக.* [Int. 1953]

**வெண்பாவடி, சிந்தடி:**

இயற்சீர் வெண்டளை அமைந்துவரும் வெண்பாவின் அடிகளும், வஞ்சியடிகளும், அகவற்பாவினுள்ளே விரவி வருமாறு புணர்க்கப்படாதன அல்ல. அஃதாவது, இயற்றளை வெள்ளடியும், வஞ்சியடியும், அகவற்பாவினுள்ளே சிறு பான்மை விரவிவரும் என்பதாம்.

**அகவலடி :**

வஞ்சிப்பாவிலே அகவற்பாவின் அடிகள் குறைவின்றி வந்து மயங்கி வழங்கும். அதாவது பெரும்பாலும் வந்து மயங்கி நடக்கும் என்பதாம்.

**கலியடி :**

வஞ்சிப்பாவிலே கலியடியும் சிறுபான்மை வந்து மயங்கி நடக்கும்

**வெண்பாவடி, அகவலடி :**

கலிப்பாவினுள்ளே வெண்பா அகவற்பா என்னும் இரு பாக்களின் அடிகளும் விரவி வருமாறு புணர்த்துப் பாடப்படும்.

உ-ம்: 'கருங்கொடிற் கலிமாக்கள் கடலிறவின் சூடு
தின்றும்
வயலாமைப் புழுக்குண்டும் வறளடம்பின் மலர்
மிலைந்தும்'

## 5. ஐஞ்சீரடியும், முரண்டொடையும்.

### ஐஞ்சீரடி.

8) ஐஞ்சீரடி வருமிடம் எவை? [Int 1952]
கலிப்பாவிலும், அகவற்பாவிலும், ஐஞ்சீரடியாகிய நெடிலடியும் சிறுபான்மையாய் வருவதற்கு உரிமை உடைத்தென்று கூறுவர் செந்தமிழ் நன்குணர்ந்த நாவலர்.

உ-ம்:

'அணிகிளர் சிறுபொறி யவிர்துத்தி மாநாகத் தெருத்தேறித்
துணியிரும் பனிமுந்நீர் தொட்டுழந்து மலைந்தனையே'.

(இக் கலியடிகளுள்ளே முன்னையது ஐஞ்சீரடி)

'உடமணர்ச் சேர்ந்து கழிந்த மருங்கி னகன்றலை
ஊர்பாழ்த் தன்ன வோமையம் பெருங்காட்
டின்னு வென்றீ ராயின்
இனியவோ பெரும தமியேற்கு மனையே'.

(இவ்வகவற் பாவின் அடிகளுள்ளே முதலாமடி ஐஞ்சீரடி)

## 2. முரண்டொடை.

9) இரணத்தொடை பற்றிய ஒருசிலர் கொள்கை யாது?

10) கடைமுரண், பின்முரண், விளக்குக [Int. 1954.]

சில நூலார், கடைமுரண், கடையிணைமுரண், பின் முரண், கடைக்கூழை முரண், என்பனவும் வரும் என்று முரண்தொடைக்கு (இரணத்தொடை) வாக்கி விசேடம் கூறுவர். அவற்றுடன் இடைப்புணர்வு முரண் என்பதையும் சேர்ப்பர்.

1) கடைமுரண்:

அடிகளின் இறுதிச் சீர்கள் முரணி நிற்குமாறு தொடுக்கப்படும் தொடை கடைமுரண் தொடையாகும்.

உ-ம்: 'வாழி திருமன்றங் கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான் புகழ்கேட்ட வார்செவிகள்
வாழி யவனை வணங்கு முடிச்சென்னி
வாழியவன் சீர்பாடும் வாய்'.

(இதில் கடைச்சீர்கள் கண், செவி முதலிய பொருளான் முரணி நிற்றலால் இது கடை முரண்டொடையாகும்.)

2) கடையிணை முரண்:

அடிகளிலே பிற்சீர் இரண்டும் தம்முள்ளே முரணி நிற்குமாறு தொடுக்கப்படுவது, கடையிணை முரணாகும்.

உ-ம்: 'மீன்றேர்ந்து வருந்திய கருங்கால் வெண்குருகு
தேனார் ஞாழல் விரிசினைக் குழூஉந்
தண்ணந் துறைவன் றவிர்ப்பவுந் தவிரான்
தேரோ காணலங் காண்டும்
பீரேர் வண்ணமுஞ் சிறுநுதல் பெரிதே'.

3) பின்முரண்:

இரண்டாம் சீர்க்கண்ணும் நான்காம் சீர்க்கண்ணும் மறுதலைப்படத் தொடுப்பது.

'சாரலோங்கிய தடந்தாட் டாழை
கொய்மலர் குவிந்து தண்ணிழல் விரிந்து
தமிய மிருந்தன மாக நின்றுதன்'

4) கடைக்கூழை முரண்:

முதற் சீர்க்கண் இன்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மறுதலைப் படத் தொடுப்பது

'காவியங் கருங்கட் செவ்வாய்ப் பைந்தொடி
பூவிரி சுரிமென் கூந்தலும்
வேய்புரை தோளு மணங்குமா லெமக்கே.'

5) இடைப்புணர் முரண்:

நடு இருசீர்க் கண்ணும் மறுதலைப்படத் தொடுப்பது.

"போதவிழ் குறிஞ்சி நெடுந்தண் மால்வரைக்
கோதையிற் றாழ்ந்த வோங்கு வெள்ளருவி

காந்தளஞ் செங்குலைப் பசுங் கூதாளி
வேரல் விரிமலர் முகையொடு விரைஇப்
பெருமலைச் சீறா, ரிழிதரு நலங்கவர்ந்
தின்னு வாயின வினியோர் மாட்டே.”

## 6. எதுகையும் மோனையும்

11) ‘வருக்க நெடிலினம் வந்தா லெதுகையு மோனையுமென் றொருக்கப் பெயரா னுரைக்கப்படும்’ — என்பதன் பொருள் கூறுக [Int 1952]

வருக்க எழுத்தும், நெடில் எழுத்தும், இன எழுத்தும், எதுகையும் மோனையுமாய் வருமாயின், அவைகளும் எதுகை என்றும், அவற்றோடு சேர்த்துரைக்கும் அப்பெயரால் வழங்கப்படும் என்பதே இதன் பொருளாகும் (வருக்கம் என்பது தன் சாதியாய் நிற்கும் திரள்) க்வர்க்கம் என்றால் க என்பதற்கு இனமாயுள்ள க, கா, முதலிய எழுத்துக்களைக் குறிக்கும். ஒருக்குதல் என்பது ஒன்றாகச் சேர்த்தல் என்று பொருள்படும். ஒருக்கப்பெயரால் உரைக்குங்கால் அவை வருக்க எதுகை, வருக்கமோனை, நெடில் எதுகை, நெடின் மோனை, இனவெதுகை, இன மோனை என வரும்.

**விளக்கம்:—**

1) **வருக்கை வெதுகை:**

முன்னர் வந்த எழுத்தின் வர்க்கமாய் உள்ள மற்றோ ரெழுத்து வந்து எதுகையாய் நிற்பது.

உ-ம்: 'பதியின்மல ரோனுருவிற் பண்புடனே தோன்றும்
மதுகாஞ்சேர் தோன்றியந்தார் மார்பன் பதுமை
தினஞ்

............ ..........................................

..................................................................,

(இதில் 'பதியின் மலரோன்' என்புழி இரண்டாம் எழுத்தாகிய தி என்பது மதுகரம் என்புழி வந்து எதுகை யாகாது, அதன் வர்க்கமாகிய, 'து' என்பது வந்து எதுகையாயிற்று)

2) நெடிலெதுகை:

முன் வந்த நெட்டெழுத்திற்கு அதுவல்லாத மற்றொரு நெட்டெழுத்து வந்து எதுகையாய் நிற்பது நெடில் எதுகையாகும்.

உ-ம்: 'கூகா வென்று குரைப்பதல் லாற்சமன்
வாவா வென்னில் வரேமென வல்லிரே
தேவே சன்பயி றில்லையி னெல்லையிற்
சேர்வீ ரேலது செய்யவும் வல்லிரே'.

3) இனவெதுகை:

முன்வந்த எழுத்திற்கு இனமாயுள்ள மற்றோ ரெழுத்து வந்து எதுகையாய் நிற்பது இனவெதுகை யாகும். அது வல்லின எதுகை, மெல்லின எதுகை, இடையினவெதுகை என மூன்று வகைப்படும்.

உ-ம்: 'சேர்ந்து வரமணலைச் செங்கையாற் றன்பரப்பி
யேய்ந்திழைத்த கூடலே யென்னுவாய்—ஆர்ந்த
வடிகெழுவேல் வல்லோன் வளருங் கருடக்
கொடியுடையோன் பந்தன் வரக் கூடு.'

(இதில் 'சேர்ந்து' என்புழி ரகரமெய்க்கு 'ஏந்திழைத்த' என்புழி யகரமெய் எதுகையாயினமையால், இது இடையின எதுகையாகும்.)

**4) வருக்கமோனை :**

முன்வந்த எழுத்திற்கு அதன் வர்க்கமாயுள்ள எழுத்து வந்து மோனையாய் நிற்பது வருக்கமோனையாகும்.

**5) நெடின்மோனை :**

முன்வந்த நெட்டெழுத்து அல்லாத மற்றொரு நெட்டெழுத்து அதற்கு மோனையாய் வந்து நிற்பது நெடின் மோனையாகும்.

உ-ம்: 'ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை'.

(இதில் முதலிலே நின்ற ஆ என்பதற்கு ஓ என்பது நெடின் மோனையாயிற்று.)

**6) இனமோனை :**

வல்லின மெல்லின இடையினங்களுள் யாதேனும் முன்வந்த எழுத்திற்கு அதன் இன எழுத்து வந்து மோனையாகி நிற்பது இன மோனையாகும்.

உ-ம்: 'கயலே ருண்கண் கலுழ நாளும்
சுடர்புரை திருநுதல் பசலை பாயத்
திருந்திழை யமைத்தோ ளரும்பட ருழப்பப்
போகல் வாழி யைய பூத்த
கொழுங்கொடி யணிமலர் தயங்கப்
பெருந்தண் வாடை வரூஉம் பொழுதே'.

(இதில் முன்வந்த ககர வல்லெழுத்திற்குச் சகரம் முதலிய வல்லெழுத்துக்கள் பின்னர் வந்து மோனையாயின. இது வல்லின மோனைக்கு உதாரணமாகும்.)

[இனவெழுத்தாவது தானமொத்த குறிலும், நெடிலும் தம்முள் இனமாம். அவை,

அகர ஆகார ஐகார ஔகாரங்கள் தம்முள் இனமாம்.
இகர ஈகார எகர ஏகாரங்கள் தம்முள் இனமாம்.
உகர ஊகார ஒகர ஓகாரங்கள் தம்முள் இனமாம்.

இவை ஏறிய உயிர்மெய்க்கும் இவ்வாறே கொள்ள வேண்டும். ஒற்றினுள்,

சகர தகரங்கள் தம்முள் இனமாம்.
ஞகர நகரங்கள் தம்முள் இனமாம்.
மகர வகரங்கள் தம்முள் இனமாம்.

[இவற்றை 'அநு' என்று வழங்குவாரும் உளர்.]

12) 'ஒருக்கப் பெயரான் உரைக்கப்படும்' — 'ஒருக்கப் பெயரான்' என்று சிறப்பித்தவதனால் பெறப்படுவது என்ன?

'ஒருக்கப் பெயரான்' என்று சிறப்பித்தவதனால், ஒரு சார் ஆசிரியர், தலையாகு எதுகை, இடையாகு எதுகை, கடையாகு எதுகை என்றும்; தலையாகுமோனை, இடையாகுமோனை, கடையாகுமோனை என்றும் வேண்டுவர்.

**விளக்கம் :**

**1) தலையாகெதுகை :**

சீர் முழுவதும் எழுத்தொன்றி வருவது தலையாகெதுகையாகும்.

உ-ம்: 'சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றெசிய நோக்கி
முலைவிலங்கிற் றென்று முனிவாள் - மலைவிலங்கு
தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும் போது.'

2) இடையாகு எதுகை:

அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றே ஒன்றி வருவது இடையாகு எதுகையாகும்.

'அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.'

3) கடையாகு எதுகை:

வருக்கவெதுகை முதலாகப் பிற வழியால் வருவன கடையாகு எதுகை ஆகும்.

உ-ம்: 'தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப்படும்.'

4) தலையாகுமோனை:

அடிதோறும் சீர் முழுதும் மோனை ஒன்றி வருவது தலையாகுமோனையாகும்.

உ-ம்: 'பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.'

5) இடையாகுமோனை:

அடிதோறும் முதலெழுத் தொன்றுமே மோனை ஒன்றி வருவது.

உ-ம்: 'மாவும் புள்ளும் வதிவயிற் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங் கமழ
மாலை வந்த வாடை.
மாயோ ளின்னுயிர்ப் புறத்திறுத் தன்றே'.

6) கடையாகுமோனை :

வருக்க மோனை முதலாகப் பிற வழியால் வருவன கடையாகுமோனையாகும்.

(உதாரணம் வந்தவழிக் கண்டு கொள்க.)

13) இடையாகெதுகை, தலையாகுமோனை — உதாரணம் கூறி விளக்குக [B. A 1952]

12-வது கேள்விக்குரிய விடையைப் பார்க்கவும்.

14) 'உயிராசிடையிட் டிருக்கு மொருசா ரிரண்டடி மூன்று மெழுத்து மொன்றி, நிரக்கு மெதுகை யென்றுவுஞ் சிறப்பில' — பொருள் கூறி விளக்குக.

உயிரெதுகை, ஆசெதுகை, இடையிட்டெதுகை, இரண்டடி எதுகை, மூன்றும் எழுத் தொன்றெதுகை என்று ஒருசார் எதுகையு முளவாயினும் அவை அவ் வளவு சிறப்பில என்பதே இதன் பொருள்.

**விளக்கம்.**

1) **உயிரெதுகை :**

முன் வந்த உயிர் மெய்யில் உயிர் மாத்திரம் பின்னும் வந்து எதுகையாய் ஒன்றி நிற்பது உயிர் எதுகையாகும்.

உ-ம்: 'பனிமயிர் குளிர்ப்பன பஞ்சின் மெல்லிய
கனிமயிர் குளிர்பன கண்கொ ளாதன
எலிமயிர்ப் போர்வைவைத் தெழினி வாங்கினார்
ஒலிமயிர்ச் சிகழிகை யுருவக் கொம்பனார்.'

(இதில் இரண்டாம் எழுத்தாய் நின்ற உயிர்மெய்யில் நின்ற உயிரெழுத்துப் பின்னும் வந்தொன்றி எதுகை யாயிற்று.)

2) ஆசெதுகை:

இரண்டாவதாய் முன்வந்த எழுத்து ஆசாய் நிற்றற் குரிய ய, ர, ல, ழ, என்னும் நான்கு மெய்களுள் யாதாயினும் ஒன்றன் பின்வந்து மூன்றாம் எழுத்தாய் நின்று எதுகை யாய் ஒன்றுவது ஆசெதுகையாகும்.

உ-ம்: 'அந்தரத் துள்ளே யகங்கை புறங்கையாய்
மந்தரமே போலு மனைவாழ்க்கை—மந்தரத்துள்
வாழ்கின்றே மென்று மகிழன்மின் வாணாளும்
போகின்ற பூளையே போன்று'.

(இங்கே 'வாழ்கின்றேம்' என்புழி ழகரத்தின் பின் மூன்றாமெழுத்தாய் நின்ற ககரவிகாரமும் 'போகின்ற' என்புழி இரண்டாம் எழுத்தாய் நின்ற ககரவிகாரமும் ஒன்றி ஆசெதுகையாயிற்று.)

3) இடையீட்டெதுகை:

முதலடியில் இரண்டாவதாய் வந்த எழுத்து இடை யிட்டு வந்து எதுகையாய் நிற்பது இடையீட்டெதுகை. இடையிட்டு வருதலால் இதனை இடையீட்டெதுகை என்று வழங்குவர்.

**4) இரண்டடி யெதுகை :**

முன்னிரண்டடியும் ஒருவகையாகப் பின்னிரண்டடியும் மற்றொரு வகையாய் வரும் எதுகை இரண்டடி எதுகையாகும்.

உ-ம்: 'முழவுஞ் சங்கமு முன்றின் முழங்குவ
விழவும் வேள்வும் விடுத்தலொன் றின்மையாற்
புகழ்த லாம்படித் தன்றிது பொன்னகர்
அகழ்தன் மாக்கட லன்னதொர் சும்மைத்தே.

(இங்கே முன்னிரண்டடியும் ழகர வெதுகையாகப் பின்னிரண்டடியும் ககரவெதுகை யாயிற்று)

**5) மூன்றாமெழுத் தெதுகை :**

இரண்டாம் எழுத்து ஒன்றுதலின்றி மூன்றாம் எழுத்து ஒன்றி நிற்பது மூன்றா மெழுத் தொன்றெதுகை.

உ-ம்: 'மனைக்குப்பாழ் வாணுத லின்மைதான் செல்லுந்
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை—இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை யின்மை
தனக்குப்பாழ்
கற்றறி வில்லா வுடம்பு.'

(இங்கே இரண்டாம் எழுத்து ஒன்றுதலின்றி மூன்றாம் எழுத்தாய் நின்ற ககரமொன்றி எதுகையாயிற்று.)

**சூத்திரம் :**

'வருக்க நெடிலினம் வந்தாலெதுகையு மோனையுமென்
றொருக்கப் பெயரா னுரைக்கப் படுமுயி ராசிடையிட்
டிருக்கு மொருசா ரிரண்டடி மூன்றா மெழுத்துமொன்றி
நிரக்கு மெதுகையென் றாலுஞ் சிறப்பில நேரிழையே.'
[யா. கா. 43]

15) ஆசெதுகை—உதாரணம் தந்து விளக்குக. [M. A. 1955]

14-வது கேள்விக்குரிய விடையில் இரண்டாவது உட்பிரிவைப் பார்க்கவும்.

7) தரவு தாழிசைகட்கு அடி வரையறை

16) தரவு தாழிசைகளின் அடி வரையறைகளை எழுதுக.

1) தரவு:

தரவுகளுள்ளே சுருங்கியது மூன்றடியால் வரும் தரவாகும். சுருங்கிய தல்லாததாய தரவிற்கு அடிவரையறை இல்லை அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பாவுக்கும், வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவுக்கும் தரவென்று சொல்லப்பட்டு வருவது ஆறடி உடையதாகும்.

2) தாழிசை:

தாழிசைப் பாக்களுள்ளே சுருங்கியது இரண்டடியான் வரும் தாழிசையாகும். தாழிசைகளுள்ளே பெருகியதாய் உயர்ந்து நீண்டது நான்கடியான் வரும் தாழிசையேயாம். தாழிசைகளினடிகள் தரவினடிகளினின்றும் குறைந்துவரும்.

## 8. கூன்—விகாரமும் பிறவும்

17) கூன், வகையுளி – இவைகளை விளக்கு. [B. A. 1953]

18) வகையுளி–உதாரணம் தந்து விளக்குக. [M.A. 1955]

19) பற்றுசு, வகையுளி, எழுத்தானந்தம் — இவற்றை விளக்குக. [M. A. 1952]

20) பூட்டுவிற்பொருள்கோள், தாப்பிசைப் பொருள் கோள் — இவற்றின் இலக்கணங்களை உதாரணம் காட்டி விளக்குக. [Int. 1954]

21) சுண்ணமொழிமாற்று, அளைமறி பாப்புப் பொருள் கோள் — இவற்றின் இலக்கணங்களை உதாரணம் காட்டி விளக்குக. [Int. 1953]

22) பூட்டுவிற்பொருள்கோள், அடி மொழிமாற்று, இவற்றின் இயல்புகளை வரைந்து உதாரணமும் தருக. [Int. 1953]

23) சொற் குற்றம், சொல்லானந்தம் — விளக்கம் செய். [Int. 1953]

24) பொருட்குற்றம், பொருளானந்தம் – இவற்றின் வேறுபாடுகளை உதாரணத்தால் விளக்குக. [Int. 1953]

25) கொண்டு கூட்டுப் பொருள்கோள், பூட்டுவிற்பொருள் கோள்—இவற்றின் இயல்புகளை உதாரணம் காட்டி விளக்குக. [Int. 1953]

26) அறு, வகையுளி, ஒப்பு—இவற்றை உதாரணம் காட்டி விளக்குக. [Int. 1953]

27) குறிப்பிசை, புனைந்துரை, அடியின்றி நடப்பன இவற்றை விளக்குக. [Int. 1953]

28) எட்டுவகை வனப்பு இவையென்று கூறி, அவற்றுள் எவையேனும் இரண்டன் தன்மையை விவரிக்க. [Int. 1955]

29) இயைபு, இழைபு–இவற்றின் இலக்கணங்கள் யாவை? [Int. 1953]

1) கூன் :

பொருளினைத் தழுவி அடியின் முதற்கண் நிற்பது கூன் எனப்படும். அதுவே மயக்கமில்லாத வஞ்சி அடியின் இறுதியிலும் பொருந்தி நிற்கும். கூன்போன்று நிற்றறில் கூன் எனப்பட்டது கூன்-ஒருவகைப் பாத்திரத்தின் மூக்கு. கூன் எனினும் தனிச்சொல் எனினும் ஒக்கும் என்பாரு முளர். சூத்திரத்தில், 'ஈற்றினும்' என்புழி உம் மையால் வஞ்சி அடியின் இடையிலும் கொள்ளப்படும்.

உ-ம்: 'உதுக்காண்
சுரந்தாறு வண்கைச் சுவணமாப் பூதன்
பரந் தானுப் பல்புகழ் பாடி-யிரந்தார்மாட்
டின்மை யகல்வது போல விருணீங்க
மின்னு மளிதேர் மழை.'

(இவ் வெண்பாவில் 'உதுக்காண்' என்பது பொருள் தழுவி அடியின் முதலிலே தனி நிற்றலால் கூனுயிற்று.

## 2. விகாரம்

விகாரம் என்பது இயற்கை நிலையினின்றும் வேருவது. செய்யுள் செய்தற்கண் சீர், தளை, முதலியன அமையாது முட்டுற்றுழிச் சொற்களிற் செய்து கொள்ளப்படும் வேறு பாடு விகாரம் எனப்படும். விகாரம், வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல் என அறுவகைப் படும். ஒரு மொழி மூவழிக் குறைதலும் சேர ஒன்பது வகை. அவற்றுள்ளே வலித்தல் என்பது மெல்லெழுத்தினை வல்லெழுத்தாக்குதல். மெலித்தலாவது வல்லெழுத்தினை மெல்லெழுத்தாக்குதல். நீட்டலாவது குற்றெழுத்தினை நெட்டெழுத்தாக்குதல். குறுக்கலாவது நெட்டெழுத்

தினைக் குற்றெழுத்தாக்குதல். விரித்தலாவது இயைபுடைய ஓரெழுத்தினை வருவித்தல். தொகுத்தலாவது இயைபுடைய ஓரெழுத்தினை மறைத்து விடுதல்.

## 3. பிற

### 1) வகையுளி

வகையுளி என்றால் பிரிவுள்ளது என்று பொருள். வகை-கூறுபாடு. அடியின்கண் அசையொடு, சீர்களை இலயம்படுமாறு இசையறுத்துக் கூறுங்கால் மொழி சிதைந்து பிரிந்திசைப்பது வகையுளியாகும். இதனைத் தொல்காப்பியர் அசைகளையும் சீர்களையும் இசையொடு சேர்த்தி வேறுபடுத்தல் என்பர். பொருளினை நோக்காது இசையையே நோக்கி விட்டிசைக்குமாறு சொற்களைப் பிளந்து உச்சரித்தலே வகையுளி என்பாரும் உளர்.

உ-ம்: 'போதலர்கா வேரிக்கும் பூம்புகார்க் கும்புதிய
நாதனெனப்பிறந்த நாகந்தை — தாதா
வரிவண்டார் பூங்குழலாய் மாப்பந் தனைப்போற
பரிவுண்டோ பாவலர்தம் மேல்.'

(இதில் 'போதலர் காவேரிக்கும்' என்பது வகையுளி. சிதைந்து விட்டிசைத்த மொழி காவேரி. 'பூம்புகார்க் கும்புதிய,' 'மாப்பந் தனைப்போல்' என்பனவும் வகையுளி. மற்றையன சீர் முடிந்துழிச் சொற்களும் விட்டிசையாது முடிந்து பொருள் பயக்க நிற்றலால் வகையுளியாகா.)

### 2) வாழ்த்து :

மெய்வாழ்த்தும் இருபுறவாழ்த்தும் என வாழ்த்து இரண்டு வகைப்படும். உறுப்பைப்பற்றி வாழ்த்துதல்

மெய்வாழ்த்தாகும் எனவும் இரு முதுகுரவரை வாழ்த்து தல் இருபுறவாழ்த்தாகும் எனவும் உரைப்பர்.

3) வசை:

வாழ்த்தினைப் போன்றே, வசையும், மெய்வசையும், இருபுறவசையு மென இருவகைப்படும்.

4) வனப்பு:

அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என வனப்பு எட்டு வகைப் படும்.

1) அம்மை:

சிலவாய், மெல்லியவாய சொற்களால், ஒவ்ளியவாய பொருண்மேற் சில அடியால் சொல்லியது.

உ-ம்: "அறிவி னருகுவ துண்டோ பிறிதினோய்
தன்னோய்போற் போற்றாக் கடை".

3) அழகு:

செய்யுட் சொல்லாகிய திரி சொற்களால் ஓசை இனியதாகப் புணர்க்கப்பட்டது.

உ-ம்: "துணியிரும் பௌவங் குறைய வாங்கி
அணிகிள ரடுக்கன் முற்றிய வெழிலி
காலோடு மயங்கிய கனையிரு ணடுநாள்
யாங்குவந் தனையோ வோங்கல் வெற்ப
நெடுவரை மருங்கிற் பாம்பென விழிதருங்
கடுவரற் கலுழி நீந்தி
வல்லியம் வழங்குங் கல்லதர் நெறியே."

3) தொன்மை:

பழையதாகி நிகழ்ந்த பெற்றி உரைக்கப்படுவது.

உ-ம்: 'செறிதொடி யுவகைகேளாய் செஞ்சுடர்த் தெறு கதிர்ச் செல்வன்' என்பதூஉம், மாபாரதம் காந்தம் போல்வனவும் கொள்க.

4) தோல்:

இழும் என்னும் மெல்லியவாகிய சொற்களாய் விழுமியவாய்க் கிடப்பனவும், எல்லாச் சொற்களானும் பல அடியாய்க் கிடப்பனவும், என இரு திறத்தனவாம்

உ-ம்: "பாயிரும் பரப்பகம் புதையப் பாம்பின்
ஆயிர மணிவிளக் கழலுஞ் சேக்கைத்
துணிதரு வெள்ளந் துயில்புடை பெயர்க்கும்
ஒளியோன் காஞ்சி யெளிதினிற் கூறின்
இம்மை யில்லை மறுமை யில்லை
நன்மை யில்லைத் தீமை யில்லை
செய்வோ ரில்லைச் செய்பொரு ளில்லை
அறிவோ ரியாரஃ திறுவுழி யிறுகென:"

(இது இழுமென் மொழியால் விழுமியது நுவன்றது.)

5) விருந்து:

புதியவற்றின் மேற்று. அஃது இப்பொழுதுள்ளாரைப் பாடுவது.

6) இயைபு:

ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள, என்னும் பதினொரு புள்ளியும் ஈறாக வந்த பாட்டு இயைபு ஆகும்.

7) புலன்:

இயற்சொல்லால் பொருள்தோன்றச் சொல்லப் படுவது புலன் ஆகும்.

8) இயைபு:

வல்லொற்றி யாதும் நீண்டாது செய்யுளியலுடை யாரால் எழுத்து எண்ணி அடி வகுக்கப்பட்ட குறளடி முதலாகப் பதினேழ் நிலத்து ஐந்தடியும் முறையாகக் கொண்டு, ஓங்கிய சொற்களால் வருவது இயைபு ஆகும்.

4 எழுத்து முதலா 6 எழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியும், குறளடியாகும்.

7 எழுத்து முதலா 9 எழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியும் சிந்தடியாகும்.

10 எழுத்து முதலா 14......ஐந்தடியும் அளவடியாகும்.

15 .................. 17......மூன்றடியும் நெடிலடி யாகும்.

18 .................... 20......மூன்றடியும் கழிநெடிலடி யாகும். அவ்வெழுத்து எண்ணுகின்ற பொழுது, குற்றியலிகரமும், குற்றியலுகரமும், ஆய்தமும், ஒற்றும் ஒழித்து, நின்ற உயிரும் உயிர் மெய்யும் கூட்டி எண்ணப்படும் ]

5) பொருள்கோள்:

பொருள்கோள் என்பது பொருளைக்கொள்ளும் முறைமையாகும். அது ஒன்பது வகைப்படும். அவை யாவன, நிரனிறை மொழிமாற்று, சுண்ணமொழி மாற்று, அடிமறி மொழிமாற்று, அடிமொழி மாற்று, பூட்டுவிற்பொருள் கோள்,* புனல்யாற்றுப் பொருள் கோள், அளைமறி பாப்புப் பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள், கொண்டுகூட்டுப் பொருள்கோள்.

1) நிரணிறை:

பெயர் நிரனிறை வினை நிரனிறை என நிரனிறை இரண்டு வகைப்படும்.

2) சுண்ணமொழிமாற்று:

சுண்ணம் போலச் சிதைந்து நிற்றலின் சுண்ணம் எனப் பட்டது. சுண்ணமாவது அளவடியாய் நின்ற ஈரடிக் கண்ணுளவாகிய எண் சீரைத் துணித்து இயையும் வழி அறிந்து கூட்டி இயற்றப்படுவது. அது அளவடி இரண்டனுள் அல்லது வாராது.

உ-ம்: 'சுரையாழ வம்மி மிதப்ப — வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை'.

(இதில், சுரை, என்பதனோடு மிதப்ப என்பது பொருள் கொள்ளவும், அம்மி என்பதனோடு ஆழ என்பது பொருள் கொள்ளவும், யானை என்பத னோடு நிலை என்பது பொருள் கொள்ளவும், முயல் ..............நீத்து............பொருள் கொள்ளவும் வந்துள்ளது.)

3) அடிமொழி மாற்று:

ஒரு மொழியை மற்றோரிடத்து எடுத்துக் கொள்வது.

உ-ம்: 'ஆலத்து மேல குவளை குளத்துள
வாலி னெடிய குரங்கு' என்பதனுள், 'ஆலத்து மேல குரங்கு, குளத்துள குவளை' என்று இரண்டடியின் மொழி மாற்றிப் பொருள் கொண் டமையால் இது அடிமொழி மாற்றாகும்.

4) பூட்டுவிற் பொருள்கோள்:

ஈற்றடியின் சொல் முதல் அடியில் வந்து பொருந்துமானல் அது பூட்டுவிற் பொருள்கோளாகும்.

உ-ம்: 'திறந்திடுமின் றீயவை பிற்காண்டு மாதர்
இறந்து படிற்பெரிதா மேதம்—உறந்தையர்கோன்
தண்ணார மார்பிற் றமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு'

(இதனுள் 'திறந்திடுமின்' என்பதனோடு 'கதவு' என்பது நோக்குடைத்தாய்ப் பொருள் கொண்டமையால், இது பூட்டுவிற் பொருள்கோளாகும்.)

5) புனல்யாற்றுப் பொருள்கோள்:

தொடர்ந்து செல்லுகின்ற ஆற்றைப்போல், அடிதோறும் பொருளற்று வருவது, புனல்யாற்றுப் பொருள்கோளாகும்

உ-ம்: 'அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றஞ்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றங்
கொலைப்பாலுங் குற்றமே யாம்'.

(இது அடிதோறும் பொருளற்று வந்துள்ளது.)

6) அளைமறிபாப்புப் பொருள்கோள்:

'தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைந்து தண்டூன்றித்
தளர்வார் தாமுஞ்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து நாற்கதியிற்
சுழல்வார் தாமும்
மூழ்ந்த பிணிநலிய முன்செய்த வினையென்றே
முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி
முயலா தாரே.

(இதனுள் 'வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறி முன்னி முயலாதார்' என்னும் இறுதிச்சொல் இடை இடையும் முதலுஞ் சென்று பொருள் கொண்டமையால் அளைமறிபாப்புப் பொருள்கோள்.)

7) தாப்பிசைப் பொருள்கோள்:

நடு நிற்கும் சொல் முதலும் இறுதியும் சென்று பொருள் கொள்வது தாப்பிசைப் பொருள் கோளாகும்.

உ-ம்: 'உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு'.

(இதில், 'ஊனை உண்ணாமை உள்ளது உயிர்நிலை' எனவும், 'ஊனை உண்ண வண்ணாத்தல் செய்யாதளறு எனவும் நடுநின்ற ஊன் என்னும் சொல் முதலும் இறுதியும் சென்று பொருள் கொண்டமையால், இது தாப்பிசைப் பொருள்கோளாகும்.)

8) கொண்டு கூட்டுப் பொருள்கோள்:

சொற்களைக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்வது.

உ-ம்: 'தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி
அஞ்சனத் தன்ன பசலை தணி வாமே
வங்கத்துச் சென்றார் வரின்'.

(இதனுள், 'அஞ்சனத்தன்ன பைங்கூந்தல்' எனவும் 'தெங்கங்காய்........வெண்கோழி முட்டையுடைத் தன்ன பசலை' எனச் சொற்களைக்கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.)

9) அடிமறி மொழிமாற்று: ஓர் அடி மற்றோரிடத்தும் மறிஇப்பொருள் கொள்வது.

உ-ம்: 'சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளி ராரணங் கினரே
வாரலை யெனிலே யானஞ் சுவலே
சார னாட நீவர லாறே.'

இவ் வாசிரியம், வேண்டிற்றோர் அடியான் முதலாகச் சொன்னாலும் ஓசையும், பொருளும் பிழையாது வந்தமையால், இது அடிமறி மொழிமாற்றாகும்.)

6) குறிப்பிசை:

குறிப்பிசையாவது சொற்குக் காரணமாகிய எழுத்திசையல்லாததாய் ஒன்றினின்றும் தோன்றும் இசையைக் குறிப்பாகக் காட்டி அதற்கு அநுகரணமாய் வரும் இசையாகும். (அநுகரணம்-ஒப்பாகத் தோன்றுவது. இது செய்யுளில் வருங்கால் சீர்தளைகட்கு இயையுமாறு அசையாக்கிக் கொள்ளப்படும்.)

உ-ம்: 'மன்றலங் கொன்றை மலர்மிலைந் துஃகுவஃ
கென்று திரியு மிடைமகனே — சென்று
மறியாட்டை யுண்ணுமை வண்கையால் வல்லே
அறியாயோ வண்ணுக்கு மாறு.'

(இவ் வெண்பாவில் வரும் முதலாம் அடியின் நான்காம் சீர்குறிப்பிசையாகும்.)

7) ஒப்பு:

சீர், அடி முதலியவற்றால் மிக்கும், குறைந்தும் வேறுபட்டுப் பாவிலாவது பாவினத்திலாவது யாதாயினும் ஒன்

றனைப் போன்று வருவது ஒப்பு எனப்படும். ஒப்பாகி நிற்ற லுடைமையால் ஒப்பெனப் பட்டது.

உ-ம்: 'உதிரந் துவறிய வேங்கை யுகிர்போல்
எதிரி முருக்கரும்ப வீர்ந்தண்கார் நீங்க-எதிருநர்க்
கின்பம் பயந்த விளவேனில் காண்டொறுந்
துன்பங் கலந்தழியு நெஞ்சு.'

(இதில் இரண்டாமடி ஒரு சீர் மிக்கு ஐஞ்சீரடியாய் வரினும் வெண்பாவுக்குரிய இலக்கணம் பெரிதும் அமைந்து நிற்றலால் வெண்பாவை ஒப்பதெனக் கொண்டு இதுவும் அதன்பாற் சார்த்தி வழங்கப்படும்.)

[சூத்திரத்தில் 'ஒப்பும்' என்ற உம்மையால், வண்ணம், புணர்ந்துரை, அடியின்றி நடப்பன — இவற்றையும் அறிந்துகொள்ளுதல் வேண்டும்.]

8) **வண்ணம்:**

வண்ணம் நூறு திறத்தனவாம் தூங்கிசை வண்ணம், ஏந்திசை வண்ணம், அடுக்கிசை வண்ணம், பிரிந்திசை வண்ணம், மயங்கிசை வண்ணம், என்னும், இவ்வைந்தினையு முதல் வைத்து, அகவல் வண்ணம், ஒழுகிசை வண்ணம், வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம் என்னும் இந் நான்கினையும், இடைவைத்து, குறில் வண்ணம், நெடில் வண்ணம், வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இடையிசை வண்ணம் என்னும் இவ்வைந்தினையுங் கடை வைத்துக்கூட்டி யுறழ நூறு வண்ணம் பிறக்கும்.

9) புனைந்துரை:

உரைக்கப் படும்பொருட் கொத்தனவெல்லாம் புகழ்ச்சியின் மிக்க புனைந்துரையாகும்.' அது பெரிய தனைச் சுருக்கிச் சொல்லுதலும், சிறியதனைப் பெருக்கிச் சொல்லுதலும் என இரண்டு வகைப்படும்.

உ-ம்: 'அடையார் பூங்கோதைக் கல்குலுந் தோன்றும்
புடையார் வனமுலையுந் தோன்றும்- இடையாதுங்
கண்டுகொள்ளா தாயினுங் காரிகை நீர்மையாட்
குண்டாக வேண்டு நகுப்பு.'

(இது பெரியதனைச் சுருக்கிற்று)

10) அடியின்றி நடப்பன:

பாட்டுரையும், நூலும், மந்திரமும், பிசியும், முதுசொல்லும், அங்கதமும், வாழ்த்தும் என்னும் இவை ஓரடியாயினும், பலவடியானும் வரப்பெறும்.

(26-வது கேள்வியில் சொல்லப்பட்டிருக்கும் 'அநுவிற்குரிய இலக்கணத்தினை, 11-வது கேள்விக்குரிய விடைப் பகுதியில் கண்டு கொள்க.)

சூத்திரம்

பொருளோ டடிமுத னிற்பது கூனது வேபொருந்தி
இருள்சேர் விலாவஞ்சி யீற்றினு நிற்கு மினியொழிந்த
மருடீர் விகாரம் வகையுளி வாழ்த்து வசைவனப்புப்
பொருள்கோள் குறிப்பிசை யொப்புங் குறிக்கொள்
பொலங்கொடியே.' [யா. கா. 45]

9. பொருளும் தொகையும்

எழுத்துக்கள் பதின்மூன்று, அசைகள் இரண்டு, சீர்கள் முப்பது, தளைகள் ஏழு, அடிகள் ஐந்து, தொடைகள்

நாற்பத்துமூன்று, பாக்கள் ஐந்து, பாவினங்கள் மூன்று, வண்ணங்கள் நூறு, பொருள்கோள் ஒன்பது, விகாரங்கள் ஆறு, வனப்புக்கள் எட்டு-இவை அனைத்தும் யாப்பருங்கலக்காரிகையில் சொல்லப்பட்ட பொருள்களாகும்.

## சூத்திரம்

'எழுத்துப் பதின்மூன் றிரண்டசை சீர்முப்ப
தேழ்தளையைந்
திழுக்கி லடிதொடை நாற்பதின் மூன்றைந்து பாவினமூன்
றெழுக்கிய வண்ணங்க ளாறென்ப தொண்பொருள்
கோளிருமூ
வழுக்கில் விகாரம் வனப்பெட் டியாப்புள் வகுத்தனவே'.

[சூத்திரத்தில் 'ஐந்திழுக்கிலடி' என்று சிறப்பித்தவதனால் திணைவழுவும், பால் வழுவும், மரபு வழுவும், வினை வழுவும், விடை வழுவும், கால வழுவும், இட வழுவும் என்று சொல்லப்பட்ட ஏழு வழுவும் படாமற் புணர்க்கப் படும் எனக்கொள்ளவேண்டும். 'வழுக்கில் விகாரம்' என்று சிறப்பித்தவதனால், எழுத்துக்குற்றம், சொற்குற்றம், பொருட் குற்றம், யாப்புக் குற்றம், அலங்காரக் குற்றம், ஆனந்தக் குற்றம் என்னும் ஆறு குற்றமும் படாமல் புணர்க்கப்படுஞ் செய்யுட்கள், என்பது பெறப்படும்.]

1) **ஆனந்தக் குற்றம் :**

செய்யுளிலே அமைக்கப் பட்டிருக்கும் பொருட்குக் கேடு பயக்கும் குற்றம் ஆனந்தக் குற்றமாகும். ஆனந்தம்— கேடு, சாக்காடு. அஃது எழுத்தானந்தம் சொல்லானந்தம், பொருளானந்தம், யாப்பானந்தம், தூக்கானந்தம், தொடையானந்தம் என அறுவகைப்படும். அவற்றுள் முக்கியமானவை எழுத்தானந்தமும் சொல்லானந்தமுமாகும்.

1) **எழுத்தானந்தம் :**

பாட்டுடைத் தலைவனுடைய இயற்பெயரைச் சார்ந்து நிற்குமாறு அளபெடை வைத்துப் பாடப்படுவது எழுத் தானந்தம் என்னும் குற்றமாகும்.

உ-ம்: 'ஆழி யிமைப்பப் பகல்போ மிரவெல்லாந்
தோழி துணையாத் துயர்தீருந்-தோழி
நறுமாலைத் தாரார் திரையவோ லென்னுஞ்
செறுமாலை சென்றடையும் போது.'

(இதில் திரையன் என்னும் பாட்டுடைத் தலைவனுடைய இயற்பெயரைச் சார்ந்து நிற்குமாறு அளபெடை வைத்துப் பாடப்பட்டிருப்பதால், இது எழுத்தானந்தமாகும்.)

2) **சொல்லானந்தம் :**

பாட்டுடைத் தலைவனுடைய இயற்பெயரைச் சார்த்தி அமங்கலம் பயக்கும் வினைச் சொற்களை வைத்துப் பாடுவது சொல்லானந்தம் எனப்படும். (அமங்கலம்—தீமை.)

உ-ம்: 'என்னிற் பொலிந்த திவண்முக மொன்றெண்ணித்
தன்னிற் குறைபடுவான் றண்மதிய-மின்னி
விரிந்திலங்கும் வெண்குடைக்கீழ்ச் செங்கோல் விசயன்
எரிந் திலங்கும் வேலி னெழும்'

3) **அலங்காரக் குற்றம் :**

'வெண்டிங்கள் போன்றிலங்கு வெண்சங்கு சங்கினைய
வண்டிலங்கு தாழை வளர்தோடு-விண்டெங்குங்
கள்ளாவி நாறுங் கருங்கழிசூழ் கானகத்தெம்
உள்ளாவி வாட்டு முரு.'

(இதனுள், வெண்டிங்கள் போலுஞ் சங்கு, சங்கு போலுந் தாழைப்பூ, என்று உவமைக் குவமை சொன்னமையால், 'அடுத்து வரலுவமை' என்னும் அலங்காரக் குற்றம். என்னை, 'உவமைக் குவமை யில்லென மொழிப' என்றாராகலின்.)

30) **எல்லாக் குற்றமும் தீர்ந்த செய்யுள் ஒன்றுக்கு உதாரணம் தருக**

'தாமரை புரையுங் காமர் சேவடிப்
பவளத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கு முடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக வெறிந்த செஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடி யோன் காப்ப
ஏம வைக லெய்தின்றா லுலகே.'

முற்றும்